முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 30-11-56 | வெள்ளி | ஒலி 35

ஓ...வி.லகாத... அளகேசரே!



அரியலூர் விபத்துக்குப் பொறுப்பேற்றுக் கொண்டு இரயில்வே அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி மட்டும் பதவியிலிருந்து விலகினார்.

செங்கொடிக் கூடாரத்தில் செங்கதிரோன்!

சிந்தை மகிழ்விக்கும் செய்தி செங்கொடிக் கூடாரத்திலிருந்து வந்திருக்கிறது.

எங்கள் வழிகாட்டி மாஸ்கோ!

எங்கள் குருபீடம் ரஷ்யா!

எங்கள் 'மெயின் ஸ்விட்ச்' சோவியத்!

—என்ற நிலைமை இனி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இருக்காதாம். அறிவித்திருக்கிறார் அஜாய் கோஷ்!

சென்ற தேர்தலிலே திராவிடர் கழகமும் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்திருந்தபோது, காங்கிரஸ் என்னும் பாம்பை அடிப்பதற்காக பெரியார் கம்யூனிஸ்டுகள் என்கிற தடியை உபயோகிக்கக் கூட்டுறவு கொண்டிருந்தபோது, கம்யூனிஸ்ட் கட்சியின் அப்போதைய ஆங்கில வார ஏடு தாங்கள் ஏன் பெரியாரது தோழமையை விரும்புகிறோம்; ஏற்றுக் கொள்கிறோம் என்பதற்கு ஒரு காரணம் காட்டியிருந்தது.

திராவிடர் கழகத்தினர் சோவியத் ரஷ்யாவைத் தங்கள் தோழர்களாகக் கருதுகிறார்கள் என்று!

அதாவது, கம்யூனிஸ்ட் கட்சி தங்களது தோழமைக்குப் பாத்திரர்களாகப் பிறரைக் கருதும்; அது எப்போது என்றால் அவர்கள் சோவியத் ரஷ்யாவைத் தங்கள் தோழர்களாகக் கருதும்போது!

நல்ல கொள்கைகள் இருந்தால்மட்டும் நட்பு மலராதாம்.

தூய உள்ளமும், துணை செய்யும் போக்கும் மட்டும் நட்புக்கு, அல்லது 'இடைக்கால நேச'த்துக்கு வித்தாக அமையாதாம்!

அவர்களும் ரஷ்யாவுக்கு 'நண்பர்'களாக இருக்க வேண்டுமாம்!

—அறிவித்திருந்தது. அந்த ஆங்கில ஏடு அப்போது!

நட்பு கொள்ள விரும்புபவர்கள் பொதுவுடைமையின் எதிரிகளாய் இருக்கலாம்!

முற்போக்குக் கருத்துக்களை முடை நாற்றம் வீசும் ஆபாசக் குட்டையாகக் கருதலாம்!

—எனினும் கவலையில்லை கம்யூனிஸ்ட் கட்சிக்கு! அவர்கள் ரஷ்யாவின் நண்பர்களாக இருந்துவிட்டால் தங்களுக்கும் நண்பர்களாகக் கருதும் மனோபாவம் கொண்டிருந்தது, அந்தக் கட்சி!

ரஷ்யா; இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி—பிரிக்க முடியாத பிணைப்பாக இருந்தது!

உருவம்; நிழல்! பொம்மை; அதை ஆட்டுவிப்பவன்!

—இந்த நிலைமையிலே சோவியத்தும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியும் ஒரு கற்பனைக் கூட்டுறவை அமைத்துக்கொண்டிருந்தன.

இருந்தும் அவர்களை மாஸ்கோவின் அடிமைகள் என்றால் கோபம் கொப்பளித்துக் கொண்டு கிளம்பிவிடும்!

பிற நாட்டிலிருந்து உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள் என்று வாயைத் திறந்தால் போதும்; வம்புக்கு வந்துவிடுவர்; தும்பறுந்த கன்று போல் துள்ளிக் குதிப்பர்!

பாவம்; அன்று அவர்கள் அறியார் தாங்கள் செய்யும் தவறு எவ்வளவு பெரியது; எங்ஙனம் அது உண்மைப் பொதுவுடைமைக் கொள்கைக்கே புதைகுழி தோண்டுவது—என்பதை!

ஆனால் இன்றோ அவர்கள் உண்மையை உணரத் துவங்கி விட்டார்கள்!

ஆமாம்; உதய சூரியன்போல உண்மை உருவமெடுத்து செங்கொடிக் கூடாரத்தில் கப்பியிருந்த அறியாமை இருளுக்கு விடை கொடுத்து அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டது!

போலந்து; ஹங்கேரி; புதுப் பாடம் போதித்துவிட்டது, இந்த உபகண்டத்துப் பொதுவுடமை வாதிகளுக்கு!

"அந்தந்த நாடுகளுக்குத் தகுந்தாற்போல் பொதுவுடமை இலட்சியத்தை அடைய பாதை வகுத்துக் கொள்ள வேண்டும்"

—இந்தச் சாதாரண உண்மையைத் தெரிந்து கொள்வதற்குத்தான் அந்த நாடுகள் எவ்வளவு பெரிய தியாகத்தைச் செய்திருக்கின்றன!

போலந்து பூமியிலாவது ஓரளவு நிலைமை கட்டுக்கடங்கி விட்டது; அந்நாட்டின் முதல்வர் கோமுல்கா தனது தாயகத்திற்கேற்றவாறு பாதையை மாற்றி அமைத்துக் கொண்டு விட்டார்.

வேறு வழியின்றி ரஷ்யா அவரது முயற்சியை ஒப்புக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆமாம்; அவரை ரஷ்யாவுக்கழைத்து—அரசியல் கைதியாக அல்ல; அந்தரங்கம் உணர்ந்த நண்பராக'—விருந்து வைத்து மரியாதையுடன் உபசரிப்பு நடத்தும் அளவிற்கு கோமுல்கா வெற்றி பெற்று விட்டார்!

ஆனால் ஹங்கேரியோ இன்னும் குழப்பங்களின் இருப்பிடமாய் இருந்து வருகிறது!

அங்கே கொந்தளிப்புகள் அடங்கவில்லை!

அங்கிருந்து வரும் செய்திகள் ஒவ்வொன்றும் சிந்தை கலக்குவதாய் சோவியத் ரஷ்யாமீது அகில உலகமும் வைத்திருந்த மதிப்பைக் குலைத்து மண்ணாக்குவதாய் அமைந்திருக்கிறது!

ஸ்டாலின் ஒரு காலத்தில் கம்யூனிச நாடுகளின் கடவுளாய் இருந்தார். அவருடைய கடைக்கண் பார்வையைப்பெற தவம் கிடந்தார்கள், அவர்கள்!

அந்தக் கடவுளின் நிலை என்ன?

அறிஞர் அண்ணாவின் 'வேலைக்காரிக்' காவியத்திலே

❊ தொடர்ச்சி 4-ம் பக்கம்



ஹங்கேரி நாட்டிலே தோன்றியுள்ள 'ஆனந்தர்கள்' நேற்றுவரை அவர்களது கடவுளாய் இருந்து வந்த ஸ்டாலினது சிலையை உடைத்து நொறுக்கினார்கள். எந்தச் சுத்தியல் அவர்களது உரிமைக் கொடியின் சின்னமாயிருந்ததோ, அதே சுத்தியலால் தங்கள் உரிமையைப் பெற அவர்கள் ஸ்டாலின் சிலையைச் சுக்கு நூறு செய்தார்கள்! படத்திலிருப்பது உடைபட்ட ஸ்டாலின் சிலையின் ஒரு பகுதி. கம்யூனிச நாடுகளின் மணிமகுடத்தைத் தாங்கியிருந்த ஸ்டாலின் தலைக்கு இப்போது அவர்கள் 'பஸ் ஸ்டாண்'டின் சின்னமொன்றைச் சொருகியிருக்கிறார்கள்! ஆமாம்; இனிமேல் நாட்டுக்குத் தகுந்தபடி தங்கள் பாதையை மாற்றிக் கொள்ளாவிட்டால், ஓ, கம்யூனிஸ்ட்டுகளே! உங்கள் வண்டி ஓடாது—என்பதை அறிவிக்கும் விதந்தான் போலும், இது!

தலையங்கம்

உதித்துவிட்டான் செங்கதிரோன் தென்திசையில்
கொதித்தெழுவோம், கொத்தடிமை தீர்வதற்கே!

சென்னை 30--11--56 வெள்ளி

கொடுமை! கொடுமை!!

145-பேர் உயிரிழந்திருக்கின்றனர்! அந்தத் தொகைக்கு மேற்பட்டவர்கள் காயம் பட்டிருக்கின்றனர்!

—அரியலூர் ரயில் விபத்துச் செய்தி இந்த ரூபத்திலே தாக்கி, நமது இருதயத்திலிருந்து இரத்தக் கண்ணீரைப் பிழிந்தெடுத்திருக்கிறது!

இது இந்த ஆண்டிலே இந்த உபகண்டத்தில் ஏற்பட்ட மூன்றாவது பெரிய விபத்து ஆகும்.

முதலில் ஜங்கம் என்ற இடத்திலும்; பிறகு ஹைதராபாத்திலேயுள்ள மஹ்பூப் நகரத்திலும்; அடுத்து இப்போது அரியலூரிலும் ஆட்சியாளர்களின் திறமையற்ற ரயில்வே துரைத்தனம் இந்த நாட்டுப் பிரஜைகளது உயிரைப் பலிவாங்கியிருக்கிறது.

.... "24 11-56 அன்றைய தினம் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு நேரிற்சென்றேன். இதுவரை தமிழ் நாட்டிலேயே இதுபோன்ற இரயில் விபத்து ஏற்பட்டிருக்காது என்றுதான் சொல்லவேண்டும். பிழைத்தவர்கள் எண்ணிக்கையைத்தான் சொல்லவேண்டுமே தவிர, இறந்தவர்கள் எண்ணிக்கையை யாராலும், எப்படியும் சொல்ல முடியாது." என்று நெஞ்சு நெக்குருகும் விதத்திலே திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் அம்பில் தர்மலிங்கம் அறிவகத்திற்கு அறிவித்திருக்கிறார்.

மெஹ்பூப் நகர் விபத்திலே தொண்ணூறுக்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்தபோதே ரயில்வே அமைச்சர் பாலங்களுக்கெல்லாம் தகுந்த பாதுகாப்பு அளித்திருப்பதாகவும்; இனிமேல் இதுபோன்ற விபத்துக்கள் தடுக்கப்பட்டுவிடுமென்றும் அறிவித்திருந்தார்.

ஆனால் அந்த முறையிலே எந்தவிதக் கண்காணிப்பும் ரயில்வே பாலங்களுக்கு அளிக்கப்படவில்லையே—என்றுதான் இன்று—இருநூறுக்கு மேற்பட்ட தென்னகத்துக் குடும்பங்கள் 'ஐய்யோ முறையோ' எனக் கூவி அழுதுகொண்டிருக்கின்றன.

ரயில்வே அதிகாரிகள் சிறிது முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொண்டிருந்தால் கூட இந்தக் கோர விபத்து தடுக்கப்பட்டிருக்கும்.

மூன்று நாட்கள் தொடர்ந்து மழை பெய்திருக்கிறது!

நவம்பர் 21-ம் தேதியே இருப்புப் பாதையில் பல இடங்களில் உடைப்புகள் ஏற்பட்டிருப்பதாகத் தாசில்தார் தகவல் அனுப்பியிருக்கிறார்!

— இருந்தும் எவ்விதத் தடுப்பு நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்படவில்லை!

— அதனால்தான் இரு நூறு குடும்பங்கள் ஆதரவற்றவர்களாய்; அனாதைகளாய் இன்று தேம்பி அழுதுகொண்டிருக்கின்றன!

உயிர் துறந்தவர்களின் குடும்பங்கள் அனைத்திற்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இராமேஸ்வரம் காண வந்த வடநாட்டுப் பக்தர்களும் கடவுளால் கைவிடப்பட்டு இறுதியில் இந்த நாட்டு இரயில்வே நிர்வாகத்தாலும் கைவிடப்பட்டுக் காலமாகியிருக்கின்றனர்!

அவர்களுடைய குடும்பத்திற்கும் நமது அனுதாபம் உரியதாகிறது.

— இந்த அலங்கோல நிர்வாகத்திற்கெல்லாம் பொறுப்பேற்றுக் கொண்டு ரயில்வே அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி தனது பதவியை ராஜிநாமா செய்திருக்கிறார்.

அது குறித்து நவம்பர் 27-ம் தேதி யன்று பாராளுமன்றத்தில் பேசும்போது அவர் குறிப்பிட்டிருக்கிறார்:

"ரயில்வே அதிகாரிகளின் பொறுப்புணர்ச்சியிலும், ஒழுக்கத்திலும் இப்போது சீர்குலைவு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இதுபோன்ற சீர்குலைவு இதர இலாக்காக்களில் இருப்பதைவிட மோசமானது என்பதை ஒத்துக்கொள்ள நான் தயாராக இல்லை" (இந்தியன் எக்ஸ்பிரஸ் நவ. 28,

—பதவி விலகும் அமைச்சரின் பேச்சு இது!

பொறுப்புணர்ச்சி அற்ற; கட்டுப்பாடான ஒழுக்கம் இல்லாத அதிகாரிகள் ரயில்வே இலாக்காவில் மட்டுமல்ல; எல்லா இலாக்காவிலுமே நிறைய இருக்கிறார்கள் என்று அறிவித்திருக்கிறார் ஒரு அமைச்சர்!

இந்தப் பச்சைத் உண்மை ஒரு மந்திரியின் வாயிலிருந்து வெளிவந்த பிறகும் பொது மக்கள் வாய்மூடி மௌனிகளாய் இருக்கத் தயாராக இல்லை!

ரெயில்வே இலாக்காவில் பொறுப்பற்ற அதிகாரிகளை வைத்துக் கொண்டிருக்கும் பொறுப்பற்ற அமைச்சர்களால் ஏராளமான உயிர்ச் சேதம் ஏற்படுகிறது!

இதர இலாக்காவில் அந்த நிலைமை நீடித்து வருவதால் உயிர்ச் சேதமல்ல; பொருள் சேதம் ஏற்படுகிறது!

—மத்திய அரசின மந்திரி சபையில் இருப்பவர்கள் மான உணர்ச்சிக்கு மதிப்பு வைப்பவர்களானால் சாஸ்திரியாரின இந்தப் படப்பிடிப்பிற்குப்பிறகும பதவியிலிருப்பதற்கு ஆசைப்படுபவர்களேயானால் அது ஜனநாயகத்தையே எள்ளி நகையாடும செயலாகத்தான் அமையும்.

அவர்களும் உடனே பதவி துறப்பதுதான இந்த உபகண்டத்திலே நல்ல பண்பாட்டிற்கு வித்திடுவதாக இருக்க முடியும.

ஒரு சாஸ்திரியார் விலகி விடுவதால்மட்டும் ரயில்வே நிர்வாகத்தில் உள்ள ஓட்டைகள் விலகிவிடாது.

ரெயில்வேயின் லாப வேட்டையிலும்; பதவி வேட்டையிலும் குறியாக இருப்பவர்கள் தொடர்ந்து இதுபோன்ற நிர்வாகக் குறைகள் ஏற்படாது என்பதற்கு உறுதியளிக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல!

விபத்தில் மரணமடைந்தவர்கள் குடும்பத்திற்கும்: காயமடைந்தவர்களுக்கும் போதிய நஷ்டஈட்டு தொகை கொடுப்பதற்கான ஏற்பாடுகளையும் துரிதமாகச் செய்ய வேண்டும்!

விபத்து நடந்த இடத்தில் நிவாரண வேலைகள் பூரணமாகச் செய்யப்படுவதற்கே இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது!

சரியான இயந்திரங்களும், மேற்பார்வையாளர்களும் இல்லாததால் நிவாரண வேலைகள் தடைபட்டிருக்கின்றன.

ரயில்வே ஊழியர்களுக்கு அன்று இருபத்தி நான்கு மணி நேரம் வரையிலும் உணவளிக்கப்படவில்லையாம்; இந்தக் காரணத்தால் வேறு மீட்சி வேலைகளின் வேகம் குறைந்திருக்கிறது.

இதுபோன்ற ஆமை வேகமும், 'எருமை மனப்பான்மை'யும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு அளிப்பதிலும் இருக்கக் கூடாது.

உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் எத்தனையோ 'ஓட்டாண்டி' களாக; ஆகியிருக்கலாம்!

அவர்களின் மனைவிமார்களும்; குழந்தை குட்டிகளும் 'பராரி' யாகும் நிலைமை ஏற்பட்டிருக்கலாம்!

--அதற்குள் அவர்கள் புது வாழ்வு பெற நஷ்ட ஈட்டுத் தொகை அவர்களை நாடிச் செல்ல வேண்டும்.

இதற்கு உடனே ஆட்சியாளர்கள் வழிவகை செய்ய வேண்டும், என்பதைத்தான் வற்புறுத்த விரும்புகிறோம!



பிள்ளைக்கனியமுது; பேசும் பொற் சித்திரம் இப்படிப் பிரேதமாகிக் கிடக்கிறது இந்தப் பொல்லாதார் நிர்வாகத்தால்!

(போட்டோ: வி. மாணிக்கம், திருச்சி.)

✻ 2-ம் பக்கத் தொடர்ச்சி

ஆனந்தன் ஆயிரங் கண்ணுடைய காளியின்மீது அபார பக்தியுள்ளவனாய் இருந்தான்!

காளி கருணை செய்வாள் என்று கைப்பொருளுக்கெல்லாம் சூடம் சாம்பிராணியாக வாங்கிப் புகைத்தான்; தூப தீப நைவேத்தியங்கள் புரிந்தான்!

பாவம்; கல்லுக்கு என்ன தெரியும்? ஆனந்தன் கேட்ட வரம் அம்மையிடமிருந்து கிட்டவில்லை!

விளைவு?

அந்த நிமிஷம்வரை அறிவிழந்து திரிந்த ஆனந்தன் நிதானத்தையும் இழந்தான்!

தேவியின் முன்னே பூசனைக்காக வைக்கப்பட்டிருந்த பொருள்களையெல்லாம் தூக்கி எறிந்தான்; பக்தனின் துயர் துடைக்க முடியாத நீயும் ஒரு தெய்வமா? — என்று தூற்றினான்!



● ஹங்கேரியின் தனியுரிமைக்காக உடல், பொருள், ஆவி அனைத்தையும் பறிகொடுத்த வீரனொருவனை வீதியிலே பிணமாக்கிப் போட்டிருக்கிறது சோவியத்தின் செம்படை!

அந்த விடுதலை வீரனின் தலைக்குப் பின்னால் நாடு கடத்தப் பட்டிருக்கும் ஹங்கேரியின் சுதந்தரத் தலைவர் இம்ரே நாகியின் உருவம் இருக்கிறது! அந்தக் கர்ம வீரனின் நெஞ்சிலே ஹங்கேரி நாட்டுக் கொடி கிடக்கிறது.

நாட்டு விடுதலைக்காக அங்கே மூச்சைக் கொடுத்தவர்கள் இவனைப் போல எத்தனையோ பேர்—என்பதை நினைக்கும்போது நம் நெஞ்சம் வேகிறது! ●●●

'தவறிழைத்தோம்; தெண்டனிட்டோம்' உணர்கிறார்கள்! உணர்கிறார்கள்!!

—இது 'வேலைக்காரி' படத்தில் வரும் ஆனந்தனின் செயல்!

ஆனந்தனாவது தேவியின் ஆராதனைக்கு வைத்திருந்த பொருள்களையெல்லாம் தூக்கி எறிந்தான்!

ஆனால் ஹங்கேரி நாட்டிலே தோன்றிய 'ஆனந்தர்களோ' அப்படியல்ல; ஒருபடி முன் சென்று தேவியின் சிலையையே தூக்கி எறிந்துவிட்டார்கள்!

'ஸ்டாலின் ஆண்டவன்' வரம் தருவான்—என்று எதிர் பார்த்தார்கள்!

பாவம்; அந்த ஆண்டவனோ ஆக்ரமிப்பு வேலைகளில் இறங்கி விட்டான்!

ஆனந்தனுடைய காளி கடவுள் வர்க்கத்தையே உணர்த்தும் பொருளாக இருந்தது!

இங்கே ஸ்டாலின் ஆண்டவனும் அப்படித்தான்; சோவியத் ரஷ்யாவின் ஆதிக்கத்தைக் குறிக்கும் பொருளாக இருக்கிறது!

அதனால்தான் ஸ்டாலின் சிலையை உடைத்திருக்கிறார்கள்; அதன் மூலம் இப்படித்தான் உடைப்போம் உங்கள் ஆதிக்கத்தையும்—என்று ரஷ்யர்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள்!

போலந்திலும்; ஹங்கேரியிலும் இவ்வாறு ரஷ்ய எதிர்ப்புப் புரட்சி எரிமலையெனப் பொங்கி எழுந்த பிறகுதான் அதன் எதிரொலியை டெல்லி கம்யூனிஸ்ட்டுக் கூடாரத்தில் கேட்க முடிகிறது!

காட்சி வடிவிலே எழுந்த காவியமாம் 'வேலைக்காரி'யைப் பார்த்த பிறகு பகவான் பக்தியை விட்டவர்கள் ஏராளம்! ஏராளம்!

அதைப் போலவேதான் இப்போதும்!

ஹங்கேரியிலே 'ஆனந்தர்கள்'—சோவியத் பகவான் எல்லாம் வல்லவன்; எல்லாம் உணர்ந்தவன்; மும்மலங்களைக் கடந்தவன்—என்னும் போலிக் கொள்கையைச் சுக்கு நூறு செய்தபின்;

அந்த 'ஆனந்தர்க'ளது செய்கையைப் பார்த்த; பத்திரிகைகளில் படித்த இந்த நாட்டுக் கம்யூனிஸ்ட்டுகளும் இப்போது 'ஆனந்தர்க'ளாக — மாஸ்கோ ஆண்டவன்மீது வைத்திருந்த மூட பக்தியை ஒழித்தவர்களாக மாறப்போவதற்கான வழியிலே இப்போது முன் செல்கின்றனர்!

இதோ, 'நியூ ஏஜ்' பத்திரிகையிலே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக் காரியதரிசி அஜாய்கோஷ் எழுதியிருப்பதைப் படியுங்கள்!

"சோவியத் யூனியனில் உள்ள சகலத்தையும் லட்சிய கீதமாகப் பார்த்தது தவறு என்பதை ஒப்புக்கொள்கிறோம். சோஷலிஸ்ட்களும், கம்யூனிஸ்ட்டுகளில்லாத ஜன நாயக வாதிகளும் சோவியத் யூனியனைக் குறித்துச் செய்துவந்த விமர்சனத்தின்பால் அதிகக் கவனம் செலுத்தியிருக்க வேண்டுவது அவசியம். எங்களிடையிலும், இதர கம்யூனிஸ்ட்டு கட்சிகளிடையிலும் சோவியத் யூனியன் செய்வதை எல்லாம் ஆதரிக்கும் போக்கு வளர்ந்தது. சோவியத் கொள்கையின் ஏதாவதொரு அம்சத்தைஎவராவது விமர்சனம் செய்தாலும் அவரைக் கண்டிக்கும் போக்கு இருந்தது என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். இந்தப் போக்கு கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட் ஐக்கிய லட்சியத்திற்கு மட்டுமல்ல; சோஷலிஸ்ட் (பொதுவுடமை) லட்சியத்திற்கே விளைத்துள்ள பாதகத்தை ஆழமாக உணர்கிறோம். இந்தப் போக்கைக் கைவிட உறுதி கொண்டிருக்கிறோம்.

–இது அஜாய் கோஷ் சோகக் கண்ணீர் வடித்தபடி எழுதியிருக்கும் வாசகங்கள்!

கருத்துரை தெளிவாகவேண்டுமா? இதோ அது:

●●● (1) 'சோவியத் யூனியனில் உள்ள சகலத்தையும்', அது செய்து வரும் நல்லவற்றையும், கெட்டவற்றையும் இதுவரை நாங்கள் 'லட்சிய கீதமா'கப் பார்த்து வந்திருக்கிறோம்!

அதாவது, சோவியத்தின் பீரங்கி இட்லரை எதிர்த்து முழக்கமிட்டதையும் லட்சிய கீதமெனக் கொண்டு, 'பேஷ்! பேஷ்!'—என்று கூறித் தலையசைத்துத் தாளம் போட்டு ரசித்திருக்கிறார்கள்!

நாஜிகளைக் கொன்ற அதே பீரங்கி; பின்னர் பேரியா மீது திரும்பி; அவரது தலையைத் திருகிச் சென்ற போதும்கூட 'இதுவும் நமது லட்சிய கீதத்தின் அனுபல்லவி போலும்!'—எனக் கொண்டு ரசனையின் சிகரத்தையே எட்டிப் பிடித்திருக்கிறார்கள்!

●●● (2) சோஷலிஸ்ட்களும், கம்யூனிஸ்ட்டுகளல்லாத இதர ஜனநாயக வாதிகளும், எங்களுக்கு 'லட்சிய கீதம்' எழுதித் தந்த சோவியத் யூனியன் பற்றி விமர்சனம் கூறியபோது, நாங்கள் அந்த விமர்சனத்தின்பால் கவனம் செலுத்தவில்லை.

அதாவது, டிட்டோ ஸ்டாலினுடைய ஆதிக்கத்திலிருந்து—அதிகாரப் பிடியிலிருந்து—அடிமை நிலையிலிருந்து விலகி வந்தபோது; சோஷலிஸ்ட்டுகளும், கம்யூனிஸ்ட்டுகளல்லாத எல்லா ஜனநாயகவாதிகளும் டிட்டோவின் துணிவைப் பாராட்டினார்கள்!

"நன்று; நன்று; நீர் செய்தது! பொதுவுடமைப் பூங்காவை நோக்கிப் பீடு நடை போடுவதற்கு மாஸ்கோ பாதையைவிட்டு விலகி; உங்கள் தாயகத்துக்கு உகந்த பாதையாம் 'யூகோஸ்லேவியா பாதை' என ஒன்று அமைத்துக் கொண்டு செல்கிறீர்கள்! உமது முயற்சியை வரவேற்கிறோம்; வாழ்த்து கூறுகிறோம்!"

—உலகத்திலுள்ள எல்லா முற்போக்குவாதிகளின் உள்ளமும் இப்படி முழக்கமிட்டன! டிட்டோவின் பாதையிலே எல்லோரையும் போகும்படி இதர நாட்டுக் கம்யூனிஸ்ட்டுகளுக்கு வேண்டுகோள் விட்டன!

ஆனால் கம்யூனிஸ்ட்கள் என்ன செய்தனர்?

மாஸ்கோ அமைத்துக் கொடுத்த மெட்டுக்கேற்ப; "டிட்டோ ஒரு துரோகி! முதலாளித்துவத்தின் கைக்கூலி!"—என்று கூக்குரல் போட்டனர்!

●●● (3) எங்களிடையிலும், இதர கம்யூனிஸ்ட்டுகளிடையிலும் சோவியத் யூனியன் செய்வதையெல்லாம் ஆதரிக்கும் போக்கு வளர்ந்தது!

அதாவது, சோவியத் யூனியனில் என்ன கோஷம் எழுப்பப் படுகிறதோ; அதை அப்படியே ஒலி அலைகளிலே மாற்றமேதுமின்றி எதிரொலிப்பதையே அகிலத்தின் எல்லாக் கம்யூனிஸ்ட்டுகளும் தாங்கள் பிறவி எடுத்ததின் பயன்—என்று கருதி வந்திருக்கின்றனர்!

டிட்டோ முன்பு ரஷ்ய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு வந்தபோது அவரை "துஷ்டன்! துரோகி! அமெரிக்காவின் அடிமை!"—என்று தூஷணை புரிந்தார்கள் அல்லவா!

பின்பு அதே டிட்டோவோடு

✻ தொடர்ச்சி 10-ம் பக்கம்

காதலுக்குக் கண்ணில்லை

• தொடர் நாடகம் •

தில்லை வில்லாளன் எம். ஏ.

காட்சி--17

[பொன்மேனியாள் தனித்து சோகமே உருவாக அமர்ந்திருக்கிறாள்.

புலிவலன் வருகிறான் புலியைக் கண்ட மானைப் போல பயந்து நடுங்குகிறாள்.]

புலி: தேவி, அழகாபுரி விட்டு வந்து நாட்கள் பலவாகியும், நீ பிறந்தகத்தின் நினைவை விட்டதாகத் தெரியவில்லையே! எப்பொழுதுமே சோகச் சித்திரமாகவே இருக்கிறாயே! தேவி, உன்மீது எவ்வளவு நேசத்தைத் தேக்கி வைத்திருக்கிறேன், தெரியுமா?

பொ: காட்டிலிருந்த கிளியைக் கொண்டுவந்து கூண்டிலே அடைத்துவிட்டு, எவ்வளவு கொஞ்சுகிறார்கள் மனிதர்கள்.

புலி: என் அன்பை சந்தேகிக்கிறாள், என் பட்டத்தரசி! எவளுக்காக என் நாட்டின் வளப்பமுள்ள மூன்று பேரூர்களைக் காணிக்கை தந்தேனோ, அவள் சந்தேகிக்கிறாள்— ஜாடை மொழி பேசி என்னைச் சாடுகிறாள் — ஐயோ, இது சரியா?

பொ: மூன்று நகரங்கள் தருவதாகச் சொன்னீர்களே, நிறைவேற்றவில்லையே!

புலி: தவறு. தேவி—அதற்கு அரசாங்கக் காரணங்கள் பல உண்டு. மண்ணூர்—புலிகள் வாழும் காடுகள் கொண்டது. அது என் வேட்டைக் காடு. இதனை மறந்து உன் தந்தையிடம் மண்ணூர் தருவதாக வாய் தவறிக் கூறி விட்டேன்.

பொ: தங்கள் நிலையை மறந்தவர்கள் உலகில் எல்லாவற்றையுமே மறந்து விடுகிறார்கள்!

புலி: பொன்னூர், அறநாட்டின் கேளிக்கை நகரம் — கடற்கரை நகரமுங்கூட— அந்த நினைவின்றி அதையும் கூறிவிட்டேன்.

பொ: பொன்னூர் என்னவாயிற்று?

புலி: ஏன் அதைத் தரவும் மறுத்துவிட்டேன் என்பது இப்போது நினைவிலில்லை. ஒரு வேளை, அந்த ஊரின் பெயரை நான் அவசரத்தில் பொய்யனிடம் கூறிவிட்டு, ஆழ்ந்து சிந்தித்ததில் முடியாமல் போயிருக்கலாம் (ராணியின் அருகில் சென்று) தேவி! நீ இங்கு தனித்திருக்கிறாய். என் அன்பைப் பெறவில்லையென்றால் நீ ஓர் அனாதை— தெரியுமா? நீ என் உடைமை. நன்றாக நினைத்துப் பார்— என் விருப்பம் எதுவோ அதுவே உன் விருப்பமாக இருக்கவேண்டும். நான் விரும்பினால், இது உனக்கு மாளிகையாக இருக்கும். இல்லாவிட்டால் இதுவே உனக்கு சிறைக் கூடமாக மாறக்கூடும். நான் விரும்பினால் நீ சுதந்திரமாக திலே பாடிடும் வானம்பாடி போலத் திரியக் கூடும். இல்லையானால் கூண்டுக் கிளியாக மாறக் கூடும்.

பொ: (ஆத்திரமாக) ஏன்? எந்த உரிமையைக் கொண்டு அப்படிச் செய்வீர்கள்?

புலி: இப்படித்தான் என் முதல் மனைவி கேட்டாள். அவள் சமாதி இன்று அறவாழி சுடுகாட்டில் அலங்காரமாக இருக்கிறது. அறிந்துகொள்.

[புலிவலன் வெளியில் செல்கிறான். பொன்மேனியாள் தனித்துப் பேசுகிறாள்.]

பொ: ஆம், மன்னர் கூறியபடி நான் தனியாகத்தானிருக்கிறேன். மணமானவள் என்று ஊர் கூறும்—ஆனால் நான் மணம்முடிந்து மூலையில் கிடக்கிறேன். மனதைக் கவர்ந்தவன் ஒருவன்; மணவாளனாக வாய்த்தவர் ஒருவர்—இந்த வெறுப்புக் குகையில் விளையாட்டு பொம்மையாக நான் கிடக்கிறேன். நான் மட்டுமல்ல—பெண்ணுலகமே இப்படித்தான். ஆண்கள் காதலிக்கும்பொழுது கண்ணே, கனியே, கற்கண்டே, கனிரசமே, மானே, தேனே, மயிலே, குயிலே —எனக் கூறுவர். ஆனால், பிறகோ, ஆட்டை நடத்துவது போல மாட்டை நடத்துவது போல நடத்துவர். பெண்களை ஆண்களின் அடிமைகள் என்பர். வாலைக் குழைத்து, கரத்தை நக்கும் நாய்க்கு உள்ள உரிமையைக்கூட பெண்களுக்குத் தருவதில்லை. பெண்களை ஆண்கள் காதலிக்கிறார்களா? இல்லை; ஒருக்காலும் இல்லை. அவர்கள் உடலை விலைக்கு வாங்குகிறார்கள்' இதுதான் பெண்ணுலகத்தின் பொது நிலை! ஒவ்வொரு பெண்ணும் ஒரு ஆணோடு பிணைக்கப்பட்டு, சுதந்திரம் பிடுங்கப்பட்டு, சுருண்டு கிடக்கிறார்கள்!

[அப்போது, குயில் குரலால் வருகிறாள்.]

கு. கு: அண்ணி, தனிமையில் என்ன செய்கிறீர்கள்?

பொ: குயில், தனிமையில்தான் இனிமை காணமுடியும்

கு. கு: ஆமாம் அண்ணனுக்கு மனைவியிடத்திலேகூட அதிகாரம் செலுத்திடவே தெரியும். அன்பிற்கும் அவருக்கும் எட்டு தலைமுறையாக சண்டை!

பொ: பாலைவனக் குயில்தான் அம்மா நீ—உன் துணைகூட இல்லையென்றால், இது பாலைவனந்தான் எனக்கு.

❊ தொடர்ச்சி 8-ம் பக்கம்

நாடகம்

[காட்சி: 11-தொடர்ச்சி]
[இடம்: தோட்டம்]

கண்ணம்மா: கொஞ்சம் எட்டியே உட்காருங்கள், சொல்லுகிறேன்.

கறுப்பன்: பார்த்தாயா?......பார்த்தாயா?........இதுதான் குறுகிய நோக்கம் ... ...
வடக்கும் தெற்கும் சேர்ந்து இணைந்து இருக்க வேண்டுமென்று கூறுகிருர்கள் தலைவர்கள்! ஆனால் தி. மு. கழகமோ — உன்னைப்போல தனித்தனியே இருப்போம் என்று வாதிடுகிறது!...நான் சொல்வது சரிதானு?...

கண்: வட நாடு, தியாகி கறுப்பனுகவும் — தென்னுடு, கண்ணம்மாளாகவும் இருந்தால் அல்லவா; இணைந்திருப்பதைப் பற்றி விவாதிப்பதில் பொருள் இருக்கும். வடக்கு ஆனைமூஞ்சிப் பிள்ளையாகவும், தெற்கு கண்ணம்மாளாகவும் இருக்கும்போது எப்படி இரண்டும் இணைய முடியும்?

கறு: அப்படியானல் வடக்கும் தெற்கும் இணைந்தே இருக்க வேண்டுமென்று கூறுகிறவர்கள் எல்லாம் உன் தங்கையைப் போன்ற சமயோஜிதம் பிள்ளைகள் தானு?

கண்: நிச்சயமாக அப்படித்தான்! 'ஏகபாரத்' என்கின்ற மணவறையிலே, வடக்கு என்ற வரட்டுக் கிழவனுடன் வாழ்க்கை நடத்துவதற்காக தெற்கு என்ற வனிதை வற்புறுத்தப் படுவதுதான் தி. மு. கழகத்தினரால் கண்டிக்கப் படுகிறது!

கறு: சரி; வடக்கு என்னைப் போல மனதுக்குப் பிடித்த மணவாளனுக இருந்தால், அதனேடு இணைந்து வாழ தெற்குச் சீமாட்டிக்கு ஆட்சேபணை இருக்கக் கூடாதல்லவா?

கண்: அந்தக் கேள்விக்கே இடமில்லை இப்போது!... என்னதான் அலங்காரம் செய்தாலும் ஆனைமூஞ்சிப் பிள்ளையை அழகு படுத்த "ஹாலிவுட் மேக்கப் மேன்"களாலும் முடியாது!...அதுபோலத்தான் வட நாட்டு ஏகாதிபத்தியத்தை எழிலரசாக ஆக்குவதற்கு எடுத்துக்கொள்ளும் முயற்சியும் ஆகிவிடும்!...

கறு: திராவிடநாடு என்று கேட்கப்படுகிற நாட்டுக்குக் குறிப்பிடப்படும் எல்லை எது?

கண்: தமிழ்நாடு—ஆந்திரம்—கேரளம்—கர்னுடகம்—நான்கும் சேர்ந்ததே திராவிட நாடு!...

கறு: திராவிடநாடு என்ற கோரிக்கை தமிழ் நாட்டிலே மட்டுந்தானே பலமாக எழுப்பப் படுகிறது; ஆந்திர, கேரள, கன்னடியர்கள் ஒத்துக் கொண்டதாகத் தெரியவில்லையே!...

கண்: கூட்டத்திலே முடிச்சு அவிழ்க்க முனைபவனைப் பார்த்த ஒருவன் "பிடியுங்கள்; விடாதீர்கள்" என்று சப்தமிடுகிருன்; கூட்டத்தில் யாருமே கூவவில்லை; இவன் மட்டும் ஏன் ஓலமிடுகிருன் என்று கேட்பதால் திருடன் நுழைந்த உண்மையை மறைத்து விட முடியுமா? அதுபோலத்தான் திராவிட நாடு சுரண்டப் படுகிறது என்ற உண்மையை திராவிட முன்னேற்றக் கழகம் கூறிவருகிறது! கோரிக்கையிலே தவறு இருக்கிறதா என்று சிந்தனை செய்யுங்கள். அதை விடுத்து அவர் ஆதரிக்கிருரா; இவர் ஆதரிக்கிருரா—என்று லட்சியத்தின் செல்வாக்கு பற்றி கணக்குப் போடாதீர்கள்! லட்சியத்தின் தூய்மை பற்றி—உண்மை பற்றி—கேள்விகளை எழுப்புங்கள்; பதில் கூறுகிறேன்.

கறு: இந்தியாவிலே வடக்கு, தெற்கு என்று பிரிப்பது; தனித்தனி அரசுகள் மலர வேண்டுமென்று கூறுவது; ஒற்றுமைக்குப் பங்கமுண்டாக்கும் செயலல்லவா?

கண்: ஒன்ருகயிருக்கும் ஒரு நாட்டைக் கூறுகளாகப் பிரித்து தனி அரசு செலுத்துவதற்கும் — தனி அரசுகள் பலவற்றை ஒன்ருக இணைத்து ஒரு குடைக்கீழ்—ஒரு ஏகாதிபத்தியத்தின் கீழ்—அடக்கி ஒடுக்கி அரசோச்சுவதற்கும் உள்ள வேறுபாடுகளை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். திராவிட நாடு என்பது இந்தியா என்னும் உப கண்டத்தோடு ஒட்டுப் போடப்பட்டுள்ள—வடக்கிற்கு முற்றிலும் முரண்பட்ட பண்புகளையும் பழக்க வழக்கங்களையும் கொண்ட ஒரு தனி நாடு!... திராவிடநாடு கேட்பது; ஒரு தேங்காயை உடைத்து அந்த மூடியை நாலைந்து கீற்றுகளாக எடுத்துச் சாப்பிடும் காரியமல்ல! மணலிலே கொட்டப்பட்டுள்ள தானியத்தைத் தனியாகப் பொறுக்கி எடுத்து உண்பது போன்ற செயலாகும்!

கறு: பழக்க வழக்கம், பண்பாடுகள் வேறு வேறு என்பதை ஒத்துக் கொள்கிறேன்; ஆனுலும் இவ்வளவு காலமாக அனைவரும் இந்தியர்கள் என்றே அழைக்கப்பட்டு விட்டோமே; இனிமேல் ஏன் ஒரு பிரிவினை?...

கண்: நாற்பத்து ஏழாம் ஆண்டுக்கு முன்பு பாகிஸ்தானியரும் சேர்ந்துதான் இந்தியர் என்று அழைக்கப்பட்டனர். ஆனால்...... இப்போது?...

கறு: அவர்கள் மதத்தாலும் மார்க்கத்தாலும் முற்றிலும் மாறுபட்டவர்கள்!

கண்: கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் நாமும் வடநாட்டாருங்கூட மதத்தாலும் மார்க்கத்தாலும் முரண்பட்டவர்கள் தான்! திராவிட நெறி தென்னுட்டாருடையது! திருவள்ளுவன் கண்ட நீதிதான் நமக்கு வேதம்!...அவர்களுக்கு மனுநீதியல்லவா மார்க்கம்!...அவர்களின் மறை வகுத்தது, பல கடவுள்களை!...நமது மறை அன்பையன்ருே ஆண்டவனுக்கிக் காட்டுகிறது!... வடநாட்டார் மொழி வேறு—மொழி இலக்கணம் வேறு!...தென்னுட்டார் மொழியும் இலக்கணமும் வேறு!.......உணவு—உடை—உறையுள் மாறுபாடுகளும்நிரம்ப உண்டு, வடக்கிற்கும் தெற்கிற்கும்!

கறு: அதே வேறுபாடுகள், தெலுங்கருக்கும் தமிழருக்கும்-தமிழருக்கும் மலையாளிக்கும் — மலையாளிக்கும் கன்னடியருக்கும்— இல்லையென்று கூற முடியுமா?...

கண்: வட நாட்டாருக்கும் தென்னுட்டாருக்குமுள்ள வேறுபாடு மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம்! நமக்குள்ளே தமிழர்—தெலுங்கர் — மலையாளி—கன்னடியருக்குள்ள மொழி, உடை, உணவு முதலிய வேறுபாடுகள் மலைக்கும் பெரும் பாறைக்கும் உள்ள வித்தியாசம்! அவ்வளவுதான்!...

கறு: பிரிந்து போவதால் என்ன லாபம்?

"முரசொலி"
பொங்கல் மலர்-1957
★
எண்ணங்களை எழுதுங்கள்!
❋

- முரசொலி பொங்கல் மலரை திராவிடம் எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்க்கிறது என்பதை நாமறிவோம். அதன் சிறப்புக்கள் என்ன என்ன—என்ற விளக்கங்கள் தரத்தேவையில்லையென்றே கருதுகிருேம்.
- "முரசொலி-பொங்கல் மலர்"-இந்தச் செய்தியே உங்களுக்கு இனிப்பூட்டக்கூடியது. மலர் எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்ற எண்ணங்களை எழுதுங்கள். இயன்ற வரை செயலாற்றி உங்கள் சிந்தை மகிழவைக்கிருேம்.
- சிலர் மலரை 'ஆர்ட்' காகிதத்தில் அச்சிட்டு, மூன்று ரூபாயில் வெளியிடலாமே!—என்று கூறுகின்றனர். எனவே, மலர் எவ்வளவு ரூபாய் விலையில் வெளியிடலாம் என்ற கருத்தையும் உடன் எழுதுங்கள்—இது மிக முக்கியம். உடன் தெரிவியுங்கள்.

—'முரசொலி' பொங்கல் மலர் பிரிவு சென்னை-6.

விற்பனையாகிறது!

தென்னகத்து மேடைதோறும் வெற்றி முரசு கொட்டி வரும்
கோள்கை விளக்க ஓவியம்! கொஞ்சு தமிழ்க் காவியம்!!

மு. கருணாநிதி
தீட்டிய

"மணி மகுடம்"

விலை ரூ. 1—8—0
விற்பனையாளருக்கு தக்க கழிவு உண்டு.

தயாராகிறது!

தங்கப் பேழை

மாறன், எம். ஏ.,
—எழுதிய—
★ தங்கம் நிகர் சிறு கதைகள்! ★

—விபரங்கட்கு—

முத்துவேல் பதிப்பகம் :: 77 மதுரைரோடு, திருச்சி-1.

கண் : பிரிந்து போவது என்று குறிப்பிடுவதை விட, விடுதலை பெறுவது என்று குறிப்பிடுவதே பொருத்தமானதாகும்!...

கறு: ஒரு நாடு இன்னொரு நாட்டால் ஆக்கிரமிக்கப் பட்டு அடிமைப் படுத்தப் பட்டால்தானே; அந்த நாடு விடுதலை கோருவதில் அர்த்தமிருக்க முடியும்? அப்படிப் பார்த்தால் திராவிடநாடு ஆக்கிரமிக்கப் பட்டதாகவோ, அடிமைப் படுத்தப் பட்டதாகவோ தெரியவில்லையே ...

கண் : உலகம் தோன்றியதிலிருந்தோ—அல்லது உலகில் மனிதர்கள் தோன்றியதிலிருந்தோ—அல்லது நாடுகள் தோன்றியதிலிருந்தோ—தென்னாடு வடநாட்டாரின் ஆளுகையிலேதான் இருந்தது என்று நீங்கள் கூறுகிறீர்களா? தென்னாடு தனிச் சுதந்திரமுடன் வாழவில்லை என்று யாராவது நிரூபிக்க இயலுமா? ஆங்கிலேயனுடைய ஆட்சியைத் தவிர, வேறு ஏவருடைய ஆட்சியிலும் வடக்கோடு தெற்கு இணைக்கப்பட்டது இல்லை!...அப்படி இணைக்கப்பட்டு வடவரிடம் ஒப்புவிக்கப்பட்ட இந்த நாடு இப்போது விழிப்புற்று விடுதலை கோருகிறது; இது எப்படித் தவறாக முடியும்?...

கறு: தனித்து நிற்பதால் பலக் குறைவுதானே!...

கண்: குழந்தைகளுக்கு வேண்டுமானால் "நான்கு எருதுகளும் ஒரு சிங்கமும்" என்ற கதையைச் சொல்லி ஒற்றுமை முழக்கமிடலாம்!......அந்த முழக்கம் விடுதலைக்குத் துடிக்கும் ஒரு அடிமை நாட்டுக்கு ஆதிபத்யநாடு வழங்கும் அறிவுரையாக இருக்க முடியாது! ஆடு நனைகிறதேயென்று ஓநாய் அழுத கதைதான் அது!

கறு: வடநாடல்ல; நானே நினைக்கிறேன் — பிரிந்து விட்டால் பலம் குறைந்து விடுமென்று!

கண்: எப்படி?

கறு: சிறிய நாடாகிவிடும் திராவிடநாடு!...எதிரிகள் சுலபத்தில் விழுங்கி விடுவார்கள்!

கண்: இப்போது எதிரியின் வயிற்றுக்குள்ளேதானே கிடக்கிறோம்! இந்த மலைப் பாம்பின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியேறுவது முக்கியமா? வெளியேறிய பிறகு வேங்கையிடம் சிக்கிவிடுவோமோ என்று கற்பனை செய்து கொண்டு மலைப்பாம்பு வயிற்றுக்குள்ளேயே ஜீரணமாகிவிடுவது சரியான காரியமா? சின்ன நாடு—அதனால் எதிரிகள் வளைத்து விடுவார்கள் என்கிறீர்களே; எகிப்துகூட சிறிய நாடுதான்!..........அதை எதிர்த்த பிரிட்டனையும் பிரான்சையும் அகில உலகமும் எதிர்த்ததே, எப்படி? பெரிய நாடுகள் எதிரிகளால் தோற்கடிக்கப்பட்டதே கிடையாதா? ஜெர்மனி என்ன ஆயிற்று? நெப்போலியனின் பிரான்சுக்கு நேர்ந்த கதி யாது?

கறு: சரி; தென்னாட்டிலே ஒரு தலைநகரை வைத்துக் கொண்டு — தென்னாட்டவர்களின் செல்வாக்கே பரிபூரணமாக இருக்கக் கூடிய ஒரு ஆட்சி உருவாகி, அந்த ஆட்சி வடக்கையும் சேர்த்து ஏக இந்தியாவை ஆளுமேயானால்...

கண்: வடநாட்டில் ரத்தப் புரட்சி ஏற்படக்கூடிய விடுதலைப் போராட்டம் உடனடியாக துவக்கப்பட்டிருக்கும்!....இல்லை!...அப்படி ஏற்படாது என்று சொல்ல முடியுமா உங்களால்? வடக்கு நம்மை அடிமைப்படுத்தி வைத்து—அந்த அடிமைத்தனத்துக்கு "இணைப்பு" என்கிற திரையைப் போட்டிருக்கிறதே தவிர, நீங்கள் கூறியவாறு தெற்கேயுள்ளவர்கள் கையில் ஆட்சி மாறுமேயானால் வடக்கு விடுதலைக் கிளர்ச்சிக்கு நிச்சயம் தயாராகிவிடும்!......இந்த நிலைமையை நீங்கள் சிந்தித்துப் பார்த்தால் "திராவிட நாடு திராவிடருக்கே!" என்பதின் பொருள் சுலபமாகப் புரிந்து விடும்!

கறு: ,திராவிடர்கள் தனி இனம், ஆண்ட பரம்பரை அடிமையாக இருக்க முடியாது—என்பதைத் தவிர விடுதலைக்கான வேறு காரணங்கள் என்ன சொல்ல முடியும்?

கண் : இதைத் தவிர வேறு காரணங்கள் எதற்காக? நிரபராதியொருவன் சிறையிலே அடைக்கப்படுகிறான். "நான் குற்றமற்றவன்; என்னை விடுதலை செய்யுங்கள்" என்று கூறுகிறான். "குற்றமற்றவன் என்பது பிறகு இருக்கட்டும்; அதைத் தவிர விடுதலையாவதற்கு வேறு காரணமிருந்தால் சொல்!" என்று கேட்க முடியுமா? "சிறை இருட்டறையாக இருக்கிறது. சாக்கடைச் சகதியாக இருக்கிறது. நல்ல உணவில்லை. உறக்கமில்லை. உடையில்லை. உல்லாசமில்லை உற்றார் உறவினர் யாருமில்லை" என்றெல்லாம் நீதிபதியிடம் எடுத்துச் சொல்லியா விடுதலை கேட்க முடியும் அந்தக் கைதி? அவன் அப்படிச் சொல்லி விடுதலை கேட்காததால்....சிறையிலேயே அந்தக் கொடுமைகள் இல்லையென்றுதான் கூறிவிட முடியுமா?...அதைப் போல வடநாட்டு ஆட்சியென்னும் சிறைச்சாலை இருக்கத்தான் செய்கிறது; நீங்கள் புள்ளி விபரத்தோடு ' சொன்னீர்களே; அந்த நிர்வாக ஊழல்களோடு!...அடக்கு முறைக் கொடுமைகளோடு!...ஆனாலும் கைதி நிலைமையிலேயிருக்கிற நாம்.........நம்முடைய விடுதலைக்குத் தலையாய காரணமாக, நாம் தனி இனத்தவர்—தனி நாட்டவர்—அடிமைப்பட்டு உழலமுடியாது — என்பதைத்தான் எடுத்துச் சொல்லுகிறோம்!...

கறு: அப்படியானால் தென்னாட்டுக்கு வடநாடு சலுகைகளை ஏராளமாக வழங்கினால்கூட விடுதலைக் கிளர்ச்சி நிற்காது என்று நீ கூறுகிறாயா?

கண்: நிச்சயம் சலுகைகள் வழங்க மாட்டார்கள்— அப்படி வழங்கினாலும், திராவிட நாடு விடுதலைப் போராட்டம் சலுகைகளை லஞ்சமாகப் பெற்று அடங்கிவிடக் கூடிய அற்பப் பண்பு பெற்றவர்களால் நடத்தப்படுவதல்ல! உலகத்தின் நானாதிசையிலும் அந்நிய ஆதிக்கத்தையும் — காலனி ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்து நடைபெறும் விடுதலைப் போராட்டங்களைக் காணும்போதுகூட திராவிட நாட்டு விடுதலையைப் பற்றி சிந்திக்காதவர்களும்—சந்தேகங் கொண்டவர்களும் இருக்கிறார்கள் என்கிறபோது வேடிக்கையாகத்தானிருக்கிறது!...

கறு: இல்லை கண்ணம்மா; எதைப் பற்றியும் ஒரு அவசர முடிவுக்கும் வரக் கூடாது பார்!......

கண்: ஆமாம்...ரொம்ப நிதானக்காரர்தான் நீங்கள்! காலையிலே.........என்னைக் கண்டதும் எவ்வளவு அவசரமாக முடிவுக்கு வந்தீர்கள் என்பது எனக்குத் தெரியாதா?

கறு: அது...நீ...பெண்!...

கண்: நான் சொல்வது; மண்!......திராவிட மண்ணைப் பற்றியும் ஒரு முடிவுக்கு வாருங்கள் என்று கூறுகிறேன்; சரிதானா?...

கறு : இதுவரையிலே நான்... இந்தியாவிலே பிறந்தவன் என்று சொல்லிக் கொண்டிருந்தேன்....இனிமேல்...

கண் : திராவிடத்திலே பிறந்தேன் என்று சொல்லுங்கள்!...அப்படிச் சொன்னால் உடனே இறந்துவிட மாட்டீர்கள்!... அப்படிச் சொல்லாதவர்கள் தான் பிணங்களாகி விட்டார்கள்!...

கறு : அப்படின்னா, நம்ப மந்திரிமார்கள் எல்லாம்......

கண் : பேசும் பிணங்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா?......

கறு : பார்த்தேயிருக்கிறேன்...

கண் : பிறகேன் என்னைக்கேட்கிறீர்கள்......

● தொடரும் ●

கு. கு: அண்ணி, தங்களுக்கு நான் சொல்லக்கூடாதுதான் —பாலைவனத்தையும், சோலைவனமாக்கும் ஆற்றல் பெண்ணினத்திற்கு உண்டென்று நூல்களில் படித்திருக்கிறேன்.

பொ: படிப்பதென்ன — அதை நடைமுறையில் செய்து வருகிறாயே குயில்.

கு. கு: நான் நூலகம் போக வேண்டும் — வரட்டுமா அண்ணி?

பொ: போய் வாம்மா.

காட்சி -18

[ஆளவந்தான் தனித்து நின்று யோசிக்கிறான்—பேசுகிறான்.]

ஆள: பொன்மேனியாள் பேசும் பொற்சித்திரம் — ஆனால் அவளோ, இந்தக் குடியன் கையில் சிக்கிய மதுக் கோப்பை போலிருக்கிறாள். அவள் மனம் இவனை எப்படி ஏற்றுக் கொள்ளும்? உறுதியாகக் கூறுகிறேன், அவள் இவனை விரும்பியிருக்க மாட்டாள். இந்தக் கொடுமைக்காரன் அவளைக் கூண்டுக் கிளியாக்கிக் கொண்டு வந்திருக்கிறான். அந்தக் கிள்ளை மொழியாள்மீது என் மனம் ஏன் இப்படித் தாவுகிறது? என் ஆசை கட்டுமீறி நிற்கிறதே! அவள் அரசி—நானோ, அரசனுக்கு மெய்ப் பாதுகாப்பாளன்! என் ஆசை நடக்கக் கூடியதா? நடக்கக் கூடியதோ இல்லையோ நான் அவளைச் சந்தித்து, இன்றே என் ஆசையைக் கூறி, அதனால் கிடைக்கும் தண்டனையை ஏற்கிறேன்.

காட்சி- 19

[சாளரத்தின் ஓரம் — துன்பமே வடிவமாக பொன்மேனியாள் நிற்கிறாள்.

'உனக்கு யாருமே துணை கிடையாது—தனித்தவள்' என்று புலிவலன் கூறியது அவள் மனதைக் குடைந்தபடியிருக்கிறது.]

பொ: ஐயோ, எனக்கு யாருமே துணையில்லையா? நான் தனியானவளா?

[அவள் கூவிவிடுகிறாள். அப்பொழுதுதான் நுழைந்த ஆளவந்தான் பேசுகிறான்.]

ஆள: ஏன், நானிருக்கிறேன்.

பொ: யார்?

ஆள: நான்தான். மன்னனின் மெய்காப்பாளன் ஆளவந்தான்.

பொ: அழகாபுரியின் அழகுதான் இங்கு அடிமையாக இருக்கிற தென்றால், வீரமுமா அடிமை வேலை செய்ய வரவேண்டும்?

ஆள: அடிமையாக இல்லை— தவறு, ராணியே — தவறு! மன்னர், தனக்கு அடுத்த இடத்திலே என்னை வைத்திருக்கிறார். ஆனால் அவர் தங்கள் வாழ்விலே நஞ்சைப் புகுத்தி விட்டார் என அஞ்சி ஓடிவந்தேன். தங்களுக்கு என் உயிர் உள்ளவரை உதவி செய்வேன்.

தி. மு. க. தேர்தல் நிதிக்காக!
15-12-56 காலை 9 மணிக்கு திருச்சி, தேவர் மன்றத்தில்
சிறப்புக் கூட்டம்
தோழர் எர். எஸ். மணி தலைமையில்
நாவலர் இரா. நெடுஞ்செழியன்
(பொருள் : இலக்கிய இன்பம்)
புரட்சி நடிகர்
எம். ஜி. ராமச்சந்திரன்
(பொருள் : கலையும் வாழ்வும்)
என்பது பற்றிப் பேசுவார்கள்.
நன்கொடை: ரூ. 1-0-0, 0-8-0

பொ: அந்தோ, நான் இந்நாட்டின் அரசியே தவிர, இன்று இந்த உதவிக்கு கைமாறு தரும் நிலையிலில்லை. என் அன்பு கலந்த நன்றியைத்தான் தரமுடியும்.

[ஆளவந்தான் உள்ளம் துடிக்கிறது. பொன்மேனியாளின் துயரம்கூடதூர ஓடிவிடுகிறது. அவள், அவனை உற்றுப் பார்க்கிறாள். அவன் அழகு அவளை அந்தரத்தில் யாத்திரை செய்ய வைக்கிறது. அவன் அவளடியில் விழுகிறான். மண்டியிட்டபடி அவள் கரங்களைப் பற்றிடுகிறான்.]

ஆள: ராணி, இதய ஓரத்தில் ஒரு துளி அன்புகூட எனக்காக மிச்சமில்லையா? (ராணி அந்த இடத்தை விட்டுப் போகயத்தனிக்கிறாள். அவனை விடவில்லை). ஓ, புனிதவதி! நான், இவ்வளவு தைரியத்தோடு, முன்பின் அறிவிப்பின்றி, திடீரெனக் கேட்கிறேன் என்பதற்காக கோபம் வேண்டாம்; மன்னித்துவிடு. அழகாபுரியில் பிறந்தநாள் விழாவிலே கண்டபோதே, உன் அழகு என் இளமை ததும்பும் இரத்தத்தில் சூட்டை ஏற்றிவிட்டது. இந்த உலகில் உன் அன்பைப் பெற, எதையும் செய்யலாம் என முடிவுக்கு வந்துவிட்டேன். சிங்கத்தின் வாயிலே நுழைந்து வரவேண்டுமா? புலிப் பால் கொண்டுவர வேண்டுமா? பனிமலை உச்சிக்குச் சென்றுவர வேண்டுமா? கடலை அளக்க வேண்டுமா? கடல் மணலை எண்ண வேண்டுமா? எது வேண்டுமானாலும், உனக்காகச் செய்வேன். என்னை உன் முன்னிலையிலிருந்தும் விரட்டி விடாதே. உன் உருவம் தெரியாதபோது ஒவ்வொரு கணமும் பல ஆண்டுகள் போலத் தோன்றுகிறது. உன் எதிரில் நிற்கும் பொழுது ஒவ்வொரு நிமிடமும், இறக்கை கட்டிப் பறக்கிறது.

பொ: நான் காதலிக்கப்பட்டதில்லை. எவராலும், இதற்கு முன்னால் — நீ உண்மையாகவே, என்னைக் காதலிக்கிறாயா?

ஆள: நீல நிறத்தைக் கேள். அது வானத்தைக் காதலிக்கிறதா என்று. பாய்ந்தோடும் அலைகளைக் கேள், அது கடலைக் காதலிக்கிறதா என்று. வளரும் பயிரைக் கேள், அது வான் மழையைக் காதலிக்கிறதா என்று. குயிலைக் கேள், பாடலை அது காதலிக்கிறதா என்று. மயிலைக் கேள் அது ஆட்டத்தைக் காதலிக்கிறதா என்று. இவை எல்லாம், என் காதலுக்கு உதாரணங்கள். இதைவிட வன்மையானது என் காதல்! என் உள்ளத்திலே கொழுந்து விட்டெரியும் காதலைத் தணிக்க, அவிக்க, கடல் நீரே போதாது! ராணி, என்னுடன் மனம் விட்டுப் பேசு.

பொ: உன்னுடன் என்ன பேசுவதென்றே தெரியவில்லை.

ஆள: உன்னைக் காதலிக்கிறேன் எனக் கனிமொழி பேசமாட்டாயா?

பொ: உன்னை நான் காதலித்தால், நீ கூறுவதுதான் என் பதில் — உன்னைக் காதலிக்கவில்லையென்றால் என்ன பதில் கூறுவது?

ஆள: என்னைக் காதலிக்கவில்லை யென்று நீ சொல்வதானால், அது ஒருநாளும் உண்மையாக இருக்க முடியாது.

பொ: நான் பதிலே சொல்லாமலிருந்துவிட்டால் நல்லதல்லவா? சந்தேகம்தான் காதல் வேகத்தை அதிகரிக்கும் என்பார்களே!

ஆள: சந்தேகம் என்னைக் கொன்றுவிடும். ஆனால், நான் சாவதற்கு அஞ்சவில்லை. நான் இன்பத்திற்காக இறப்பேன்; சந்தேகத்திற்காக சாகமாட்டேன். ராணி, சொல், நான் இருக்கவா? இந்த இடத்தை விட்டுப் போகவா, சொல்?

பொ: நான் உன்னைப் போகவும் சொல்ல விரும்பவில்லை. இருக்கவும் சொல்ல விரும்பவில்லை. ஏனெனில், இங்கே இருந்தால், என் உள்ளத்தை திருடிக் கொள்கிறாய். போய் விட்டால், என் இதயத்தை எடுத்துக் கொண்டு போய் விடுகிறாய். கடல் ஆழத்தை கண்டுவிடலாம். அழகாபுரியில் தங்கள் வீர விளையாடல்களைக் கண்ட பிறகு, என் உள்ளத்தைப் பறிகொடுத்தேன்...ஆனால் இங்கு கட்டாயமாகக் கொண்டுவரப்பட்டேன். என் காதல் ஆழத்தைக் காணமுடியா ஆளவந்தாரே, நான் காதலிக்கிறேன்.

[ஆளவந்தான் கரங்களை விரித்து, அவளைத் தழுவத் துடிக்கிறான்.]

ஆள: கண்ணே, நிறுத்தாதே! மேலே பேசு! அந்த இன்பத்தை என் செவி இடைவிடாது அனுபவிக்கட்டும். உம், அருகில் வா. தேனொழுகும் உன் கொவ்வை நிற உதடுகளில் என் உதடுகளைப் பதித்து எழுப்பும் 'இச்' செனக் கிளம்பும் இசை, என் செவிக்கு மேலும் இன்பத்தைத் தரும்!

பொ: என் உதட்டைத் தொட்டுவிட்டால் மட்டும் என் உள்ளத்தைத் தொட்டதாகாது.

ஆள: உன் இதயத்தையும் நான் தொட, இன்னும் நெருங்கி வா, கண்ணே.

பொ: ஐயோ. கண்ணாளா, அந்த இதயம் என்னிடம் இல்லையே! முதன்முதல் வாள் போர் செய்தீர்களே, அன்றே தாங்கள் எடுத்துப்போகும்படித் தந்துவிட்டேனே! திருடமனமில்லாத திருடன்—இருந்தாலும், இன்பக் கதவுகளைத் திறந்து, அன்பெனும் வைர மாலையை எடுத்துச் செல்ல அனுமதித்து விட்டேனே!

ஆள: காதல் செல்வமே, கண்மணியே! கரும்பின் சுவையே! அன்பு முகத்தைத் தூக்கு. பவளக்கடலில் குதித்து, முத்துக்களைத் தேடி, தங்கப் பாளத்தைக் காணட்டுமா? என் கண்ணே, கற்கண்டே! உன்னை எப்பொழுதும் பார்த்துக் கொண்டேயிருக்கும் தைரியம் பெற்றுவிட்டேன். கதிரவனைக் காணக் கூசி, இலை மறைவில் ஒளிந்து கிடக்கும் பூச்சியாக இருக்கிறேன். என் கண்கள் துணிகரமான கண்கள்! அவை வானத்து நட்சத்திரங்கள் போல ஒளியோடு, என்றும், எப்பொழுதும் உன்னைப் பார்க்கும்.

பொ: கண்ணாளா, நீங்கள் எப்பொழுதுமே என்னைப் பார்க்கலாம். உங்கள் கண்கள் களங்கமிலா கண்ணாடிகள். அந்தக் கண்ணாடிக்குள் நான் பார்க்கிறேன். அதில் என்னையே, என் உருவையே நான் காண்கிறேன். இதனால் என் உருவம் உங்கள் உள்ளத்தில் நிரந்தரமாகக் குடியேறிவிட்டது என்பதை உணர்கிறேன்.

[ஆளவந்தான் சூழ்நிலை மறந்து—மன்னனின் மனைவி அவள் என்பதை மறந்து—விளைவு என்னவாகுமோ என்பதையும் மறந்து—அவளை இறுகத் தழுவிக் கொண்டான்.]

● தொடரும் ●

★

● கையிழந்தோர்; கால்கள் முடமானோர்; மூளை சிதறுண்டோர்; ஐயோ! கொடுமை! கொடுமை!! கண்கள் கூசுகின்றன; நெஞ்சு துடிக்கிறது. இவை அனைத்தும் இந்த நாட்டின் திறமையற்ற ரெயில்வே துரைத்தனத்தாரின் காணிக்கை!

புகைப்படம்: வி. மாணிக்கம்.

★

காமராசரே; கண் திறப்பீர்!

"வடநாடு வாழ்கிறது; தெற்கு தாழ்கிறது"

"வடநாட்டிலே ஆலைகள் குவிகின்றன; தென்னகம் வரண்ட பாலையாகிறது"

—இந்த உண்மையை எவ்வளவுதான் மறைத்திடப் பார்த்தாலும் முடியவில்லை சென்னை அமைச்சர்களால்!

செல்லும் இடமெங்கும் முயன்று பார்க்கின்றனர்; இமயத்தை மறைக்கமுடியுமா? இது தெரிந்தும் வீண் முயற்சியில் இறங்கியுள்ளனர் இந்த மாநிலத்து அமைச்சர்கள்!

மேலும் மேலும் வந்து குவியும் செய்திகள் நம்முடைய வாதத்தைத்தான் பலப்படுத்துவதாக அமைந்திருக்கின்றன!

முன்பு தஞ்சையிலே பேசிய காமராசர் தெரிவித்தார்:

தொழில் துறையில் வடநாடு வானோங்கி வளர்கிறது; செழிக்கிறது என்று கூறினால் மட்டும் போதுமா? வடநாட்டிலே தனிப்பட்டவர்கள் பெரும் பெரும் ஆலைகளை அமைக்க முன்வருகிறார்கள். ஆனால் தென்னாட்டில் உள்ளவர்கள் அப்படி முன் வருவதில்லையே!

—என்று குறைபட்டுக் கொண்டார், காமராசர்!

தென்னாட்டில் எந்தத் தனிப்பட்டவர்களும் ஆலைகள் நிறுவ முன்வர வில்லையாம்!

அதனால்தான் தொழில்துறையில் தென்னகம் பின் தங்கிக் கிடக்கிறதாம்!

—காமராசர் இப்படியொரு விசித்திர விளக்கம் தந்தார், தஞ்சையில்!

சரி; தென்னகத்தில் தனிப்பட்டவர்கள்தான் துணிந்து முதலீடு செய்ய முன்வரவில்லை.

அரசாங்கமே முயன்று முதலீடு செய்கிறதல்லவா, பல தொழிற்சாலைகளுக்கு!

அதையாவது தென்னகத்தில் அமைப்பதற்கான வழி வகைகள் செய்யப்பட்டனவா?

வட நாட்டிலே தொழிற்சாலைகள் அமைக்க; ஆலைகளைப் பெருக்க தனிப்பட்ட முதலாளிகள் முன்வருகின்றனர்—தென்னகத்தில் அப்படி யாரும் முன்வராத காரணத்தால் நாங்களே முன்வந்து தொழிற்சாலைகளை அமைக்கிறோம் என்று இந்த ஆட்சி பீடம் செயல்பட்டிருக்கிறதா?

இல்லை! இல்லை!! இல்லை!!!

இதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் பல ஆதாரங்களை எடுத்து நீட்டும் நிலையிலே இருக்கிறது.

★ ★ ★ மேற்கு ஜெர்மனியின் உதவியுடன் இந்த நாட்டிலே ஒரு உயர்தர தொழில் நுணுக்கக் கல்வி நிலையமொன்றை நிறுவுவதற்கு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

★ ★ அதை எங்கே நிறுவுவது என்பதுபற்றி முடிவு செய்ய நிபுணர் குழுவொன்று மேற்கு ஜெர்மனியிலிருந்து இந்தியா வந்தது.

★ ★ அந்தக் குழு கல்விச் சாலையை நிறுவுவதற்கு சென்னை அல்லது கான்பூர் உகந்தது எனத் தீர்மானம் செய்திருக்கின்றது.

★ ★ வடநாட்டிலே உயர்தர தொழில் நுணுக்கக் கல்வி நிலையங்களுக்குப் பஞ்சம் கிடையாது. நோக்குமிடமெங்கும் அங்கே நீக்கமற ஆலைகள் நிறைந்திருக்கின்றன!

★ ★ வட நாட்டிலேயுள்ள கரச்பூர் என்னுமிடத்தில் ஒரு உயர்ந்த தொழிற் கல்வி நிலையமொன்று எல்லா வசதிகளுடனும் நிறுவப்பட்டு இயங்கி வருகிறது.

அதுமட்டுமா?

★★ சோவியத் நாடு தனது செலவிலேயே ஒரு உயர்தர தொழிற் கல்விச் சாலையை அமைக்க இருக்கிறது; இங்கல்ல—பம்பாயில்! விரைவிலே இதற்கான வேலைகள் துவக்கப்பட்டுவிடும் என்ற அறிவிப்பும் வந்திருக்கிறது.

★★ இது தவிறவும், வட நாட்டிலே பல தொழிற் கல்வி நிலையங்கள் இருக்கின்றன. டில்லி மாநகரத்திலே இருக்கும் பலதிறப்பட்ட தொழில் போதிக்கும் கல்லூரிகள் சிறப்பெற்று விளங்கி வருகின்றன!

—இவ்வளவு இருந்தும் இன்னும் வடநாட்டு ஆலை அரசிற்கு ஆவல் தீரவில்லை!

★★★ சரித்திரத்திலே படித்திருக்கிறோம்; கஜினி முகம்மது சாவதற்கு முன்புதான் கொள்ளையடித்த பொன்னையும் மணியையும் குன்றுபோல் குவிக்கச் செய்தானும்!

★ ★ அதைக் கண் குளிர ஒரு முறை பார்த்த பிறகுதான் அவன் கண்ணை மூடினானும்!

★ ★ இப்போது இந்த ஏக இந்தியப் பித்தர்கள் செய்து வரும் செயலும் இப்படித்தான் இருக்கிறது.

★ ★ வடநாட்டுத் தலைவர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் சாவதற்கு முன்பு தங்கள் பிராந்தியத்தை ஒரு மாபெரும் ஆலை அரசாகப் பார்த்து விட்டுத்தான் போக வேண்டுமென்று தீர்மானம் செய்து அதன்படிப் பணியாற்றுவதாகத்தான் நம்ப வேண்டியிருக்கிறது.

★★★ ஏனெனில் மேற்கு ஜெர்மனியின் உதவியுடன் அமைய இருக்கும் தொழில் நுணுக்கக் கல்லூரியையும் கான்பூரிலேயே நிறுவுவதற்கு இப்போது பெருமுயற்சி செய்யப்படுகிறதாம்!

★★ வடநாட்டுத் தொழிலதிபர்களும்; தென்னாட்டை வாழவிடக்கூடாது எனக் கருதிவரும் வன்னெஞ்சர்களும் எப்பாடுபட்டாவது அக் கல்லூரியைத் தங்கள் பிராந்தியத்தில் அமைத்துக் கொள்வதற்கு அல்லும் பகலும் அனவரதமும் பாடுபடுகிறார்களாம்!

★★★ காமராசருக்கு இது ஒரு சவால்! "தென்னகத்தில் பெரிய ஆலைகள் அமைவதற்கு" இங்கு தனிப்பட்ட முதலாளிகள் யாரும் தொழிற்சாலை அமைக்க முன்வரவில்லையே! நாங்கள் என்ன செய்யட்டும் —என்று கேட்டார் காமராசர்!

★★ இப்போதோ மேலே குறிப்பிட்ட தொழில் நுணுக்கக் கல்லூரியை அமைப்பதற்கு அரசாங்கமே முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது, மேற்கு ஜெர்மனியின் உதவி கொண்டு!

★★ இதைத் தடுத்து; ஒரு உயர்தர தொழில் நுணுக்கக் கல்வி நிலையத்தைத் தங்கள் பூமியிலே நிறுவிக்கொள்ள வடநாட்டு அதிபர்கள் முயன்று வருகிறார்கள்!

★★★ காமராசரே! பைந்தமிழ் நாட்டின் நலனொன்றையே கனவிலும் நாடிக் கொண்டிருப்பதாகக் கருதப்படும் பச்சைத் தமிழரே! இப்போதாவது நீர் கண் திறக்கக் கூடாதா?

★★★ கண் திறந்து மட்டும் பயன் இல்லை, கனம் அவர்களே! வாய் திறக்கவேண்டும்! அது எங்களுக்கு வேண்டும்—என்று போர் தொடுக்க வேண்டும்! தமிழகத்திற்கு நீர் இந்த உதவியையாவது செய்வீரா?

●

தேர்தல் நிதிக் கலை நிகழ்ச்சி!

✻

சென்னையில் டிசம்பர் 9-ல்!

நடிப்பிசைப் புலவர்

கே. ஆர். ராமசாமி

புரட்சி நடிகர்

எம். ஜி. ராமச்சந்திரன்

இலட்சிய நடிகர்

எஸ். எஸ். இராஜேந்திரன்

நடிகமணி

டி. வி. நாராயணசாமி

ஆகியோர் அளிக்கும்

கலை விருந்து ஏற்பாடாகி வருகிறது!

கலைவிருந்து பெறுவீர்! காணிக்கை தருவீர்!!

தலைமைக் கழகம் (தி. மு. க.)

'வழுக்கி விழுந்தோரே!' வாழ்வு பெற வாரீர்!

✻ 4-ம் பக்கத் தொடர்ச்சி

புல்கானினும் குருஷேவும் உறவாட ஆரம்பித்தார்கள்!

'இவர்கள்' யுகோஸ்லேவியாவிற்கும்; 'அவர்' ரஷ்யாவிற்கும் வந்ததால் உறவு மீண்டும் மலர்ந்தது.

முன்பு துரோகி என்று கூறிய கம்யூனிஸ்டுகள் இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு என்ன கூறினர்கள்?

மாஸ்கோ செய்தது மகா தப்பு; டிட்டோ துரோகிதான்; அமெரிக்கரின் ஆதரவு பெற்ற அடிமைதான்!—என்றுவது இவர்கள் மீண்டும் நிலைநாட்ட முயன்றுர்களா?

இல்லை!

கண நேரத்தில் அவர்கள் ஒரு 'குட்டிக்கரணம்' போட்டுத் தங்கள் கொள்கையை மாற்றிக் கொண்டார்கள்!

முன்னர் கூறியவற்றை மக்கள் மறந்திருக்க மாட்டார்களே!—என்பது தெரிந்தும் அவர்கள் 'பல்டி' அடித்தனர்!

●●● (4) சோவியத் கொள்கையின் ஏதாவது ஒரு அம்சத்தை எவராவது விமர்சனம் செய்தால் அவர்களைக் கண்டனம் செய்யும் போக்கு இருந்தது என்பதை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம்!

அதாவது, மாஸ்கோ பற்றி பெருமையாகக் கூறியவர்களது பேச்சுக்குத்தான் மதிப்பு தரப்பட்டது; மற்றவர்கள் அனைவரும் மட்டரகமான முறையிலே கண்மூடித் தனமாகத் தாக்கப் பட்டிருக்கிறுர்கள்!

வெளி நாட்டிலிருந்து உத்தரவு பெறுவதாய் இருக்கிறீர்களே! இது உங்கள் தாயகப் பற்றைச் சந்தேகப்படும்படிச் செய்கிறதே!—என்று ஐயவினு எழுப்பியவர்கள் எத்துவேலைக்காரர்கள் என்று குறிப்பிடப் பட்டனர்!

டிராட்ஸ்கி

பெரியா

—இவர்களது முடிவு பற்றிய உண்மை நிலைமை இதுவாயிருக்குமோ—என்று யூகம் சொல்வதற்குக்கூடப் பிறர் அனுமதிக்கப் படவில்லை.

●●● (5) இந்தப் போக்கு கம்யூனிஸ்ட் சோஷலிஸ்ட் ஐக்கிய லட்சியத்திற்கு மட்டுமல்ல; சோஷலிஸ்ட் லட்சியத்திற்கே விளைத்துள்ள பாதகத்தை ஆழமாக உணர்கிறோம்!

—இது முன்பு சொல்லப்பட்ட முறை கெட்ட செயல்களின் விளைவு!

—இதிலேதான் அணுவுக்கு அணு உண்மை ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது.

பத்து மாதம் சுமந்துபெற்ற குழந்தையைத் தானே கழுத்தை நெறித்துக் கொன்று போடும் இரக்க மற்ற தாயைப் போல;

போற்றிப் பாதுகாக்க வேண்டிய இலட்சியத்திற்கு, சிந்தனையை வேற்றுநாட்டாருக்கு அடகு வைத்ததின் மூலம் கேடு விளைவித்து விட்டார்கள்!

அடிமை மனேபாவம்—

சுதந்தரமற்ற சிந்தனை—

குனிந்து கொடுக்கும் மனப்பான்மை—

எதையும் தனித்து தீர்மானிக்கும் துணிவின்மை—

—இவைதான் மகோன்னத இலட்சியத்தின் ஆணி வேரிலே வெந்நீர் வார்த்து விட்டது!

—இதை உணர்ந்திருக்கிறுர்கள் அவர்கள் என்பது நமக்கு மகிழ்ச்சியைத்தான் தருகிறது!

அஜாய் கோஷின் இந்தக் கடிதம் மேலும் ஒரு மகத்தானதொரு உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறது:

"சோஷலிசம் ஒவ்வொரு நாட்டிலும் ஒரு இயக்கத்தின் மூலமாக சாத்தியமாக்கப் படுகிறது. அந்த இயக்கம் எல்லா நாடுகளுக்கும் பொதுவான கோட்பாடுகளை அடிப்படையாகக் கொள்ளுகிற அதே சமயத்தில், ஒவ்வொரு நாட்டினுடைய பிரத்யேகமான பாரம்பரியம், விசேஷமான அம்சங்கள் ஆகியவற்றையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும் என்ற மார்க்சிச-லெனினிசக் கோட்பாட்டின்படி நடக்கத் தவறியது கடந்த காலத்தில் எங்களுடைய மிகக் கடுமையான தவறுகளில் ஒன்று. மேலும், சோஷலிஸ்ட் சமூகமும்கூட பல்வேறு ரூபங்களை எடுத்துக்கொள்கிறது. சோஷலிசத்தை அடையும் பாதையும் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது.

●●● ஒவ்வொரு நாட்டினுடைய பிரத்யேகமான பாரம்பரியம், விசேஷமான அம்சங்கள் ஆகியவற்றையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்!

●●● சோஷலிசத்தை அடையும் பாதையும் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது!

—மணியான வார்த்தைகள்! அனுதினமும் நாம் அவர்களுக்கு எடுத்து ஓதிக் கொண்டிருந்த வாசகங்கள்!

—அதையேதான் இப்போது திருப்பிக் கூறியிருக்கிறுர், அஜாய்!

பொதுவுடமைப்பாதை நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது!

—இப்போதுதான் உணர்கிறுர்கள், இந்த உன்னத விளக்கத்தை!

இந்த விளக்கத்தைத் தென்னகத்துக் கம்யூனிஸ்ட்டுகள் உணர்ந்து கொள்வதற்கு முன்பு அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய சில அடிப்படை உண்மைகள் இருக்கின்றன.

பொதுவுடமைப் பாதை நாட்டுக்கு நாடு மாறுகிறது.

அவ்வாருனல் நாடு என்பது என்ன?

அதற்குரிய லட்சணங்கள் யாவை?

அதன்படி இந்திய உபகண்டம் தென்னகவாசிகளாகிய நமக்குச் சொந்தமான நாடாகுமா?

—இந்தக் கேள்விகளை ஒரு முறை எழுப்பிக் கொண்டு அவர்கள் பதில் சொல்லிப் பார்க்க வேண்டும்.

சற்று நேர்மையுடன் சிந்திப்பார்களேயானல் அவர்கள் நிச்சயம் உணர்ந்து கொள்வார்கள்—ஓர வஞ்சகமும், தீராப் பகைமையும் கொண்டிருக்கும் வடநாட்டு ஆட்சிபீடம் நமக்குரிய பீடமல்ல—என்ற உண்மையை!

இது ஒன்றும் சிரமமான காரியமல்ல; ஏனெனில் "நாட்டுக்கு நாடு சோஷலிசத்தை அடையும் பாதை வேறு படுகிறது"—என்பதை இவ்வளவு கஷ்டப்பட்டு, காலதாமதத்துடன் உணர்ந்து கொண்டவர்கள் சிறிது சிந்தனைக்கு வேலை கொடுத்து. சரிதப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தாலே போதும்; அவர்களைச் சுற்றியிருக்கும் இருள் அகன்று பொழுது புலர்ந்துவிடும்!

இதே நேரத்திலேதான் மீண்டுமொரு முறை அவர்கட்கு அறிஞர் அண்ணு அவர்கள் சென்ற சென்னை மாநில மாநாட்டிலே பேசிய பேச்சின் திரண்ட கருத்தினை நினைவுபடுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம்:

நாட்டுக்கு நாடு கொள்கைகளை அமுல் நடத்தும் வழிகளிலே மாற்றம் வேண்டும்; அதன்படிப் பார்க்கப் போனுல் இந்திய உபகண்டம் முழுமைக்கும் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை வைத்துக் கொண்டிருப்பது கடைந்தெடுத்த பேதமை. எனவே, தென்னகத்தின் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களே! உடனடியாக உண்மையுணர்ந்து திராவிட நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சியென்று உங்கள் அமைப்பை மாற்றிக் கொள்ளுங்கள்! அதற்கடுத்த நிமிடமே நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கலைத்து விடுகிறேன்!

—அறிஞர் அண்ணுவின் இந்த அறிவிப்பு இன்றளவும் கம்யூனிஸ்ட் நண்பர்களைப் பார்த்து பதில் கேட்ட வண்ணம்தான் இருக்கிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாபெரும் தவறென்றை இழைத்து விட்டு இன்று அதைத் திருத்திக் கொள்ள முன்வந்திருக்கிறது!

ஆமாம்; இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இன்றைய அரசியலிலே ஒரு 'வழுக்கி விழுந்த இயக்கம்!' சமுதாயத்தில் வழுக்கி விழுந்தவர்களுக்கே வாழ்வளிக்க வேண்டுமென்னும் தென்னகத்தின் மாபெரும் ஜனநாயக இயக்கமாம் தி. மு. கழகம், அரசியலில் 'வழுக்கி விழுந்த' கம்யூனிஸ்டுகளின் பழமையை மறந்து விடத் தயாராயிருக்கிறது; பொது மக்களும் அதை மன்னித்துவிட சித்தமாயிருக்கின்றனர்.

அதனுல்தான் அருமைக் கம்யூனிஸ்ட் நண்பர்களே! நன்ருகச் சிந்தியுங்கள்! வடநாட்டுத் தலைமைப் பீடத்திலிருந்து உங்களைத் துண்டித்துக்கொள்ள தயாராகுங்கள்!—என்று அறிவிக்கிறது.

தருணம் இதே; தவறிடிலோ வருங்காலம் உங்களை மன்னிக்காது—என்றும் எச்சரிக்கை செய்கிறது!

—மாறன், எம். ஏ.

பிறைவானம் ...

✻ 11-ம் பக்கத் தொடர்ச்சி

கிறுன். பாறை ஒன்றின் மேல் கிடந்த மான்தோல் அவனைப் பார்த்து சிரித்தது!

"என்ன தம்பி பார்க்கிற? அது என்னேடைதான்! நான்தான் நேத்து காயவச்சேன், எடுத்துப் போக மறந்து விட்டேன். இப்பதான் வந்தேன்... உனக்கு வேணுமா?..."—நீர் தெளித்து அவனது மயக்கம் நீக்கிய கிழவன் பேசிக் கொண்டே போனுன்.

அவன் சிலைபோல் நின்றுன்.

"அதிருக்கட்டும்; என் தம்பி நீ இங்கே விழுந்துகிடந்தே; செத்தவன் மாதிரி...?"

கிழவர் பதிலுக்காகக் காத்திருந்தார்.

"பிணம் போலவா?...ம்... வீரன் ஒருமுறைதான் சாகிறுன்! ஆனல் கோழை பல முறை சாகிறுன்..."

—என்று சொல்லி விட்டு அந்தச் சிறுவன் தன் ஊர் நோக்கி வேக வேகமாக நடக்க ஆரம்பித்தான்!

—'சொர்ணம்'

கோழை

"ஏழையாக எத்தனை ஆண்டுகளாயினும் வாழலாம்; ஆனால், கோழையாய் ஒருக்கணமும் வாழ விரும்பாதே!"

உயர்ந்த தத்துவம் — ஒப்பற்ற நீதி நிறைந்த சொற்கள்!

ஆமாம்; பயங்கொள்ளிதான் கோழை! உலகில் நாம் எதற்காகப் பயப்பட வேண்டும்? ஒளிகுன்று கண்கள் உருட்டி, கூரிய பார்வையால் உலகில் எந்த மூலையில் அநீதி தலைகாட்டுகிறதென்று தேடிக்கொண்டிருக்கும் அறத்திற்கு மட்டுமே நாம் பயப்படலாம்; பயப்படவேண்டும். நேர்மை தவறுதவர்களின் செயலும் அதுதான். தைரியத்தின் துணைகொண்டு எதற்கும் அஞ்சாது நடைபோடும் நல்ல உள்ளத்தினரைக் கண்டு பயமல்லவா பயந்து ஓடும்! தன்னிடமிருந்து தைரியத்தை ஒட்டியவனைவிட்டு நிம்மதியும் அமைதியும் தானே ஓடிவிடுமே!

அதோ, படர்ந்து வரும் இருளைப் பொருட்படுத்தாதவன்போல் நடந்து வருகிறானே ஒரு தம்பி, அவனது நடையிலே வேகத்தைப் பார்த்தீர்களா?

அவன் நல்ல தைரியசாலி என்றுதானே எண்ணுகிறீர்கள்? தவறான எண்ணம்— நடையை மட்டுமே கவனித்தீர்கள். அவன் முகம், அகம் இரண்டிலும்—இருளும் அடர்ந்த மரங்களும். 'உஸ்...உஸ்' என்று சுழன்றடித்த காற்றும் இனம் தெரியாத குழப்பத்தைத் தோற்றுவித்துவிட்டது. அவன் பயமற்றவன்போல் தன்னையே ஏமாற்றிக்கொண்டுதான் நடக்கிறான். அது நடக்குமா?

"நடக்காது; நடக்காது!" என்று அறிவுறுத்திவிட்டதே ஒரு திடீர்ச் சம்பவம்!

வேகமாக வந்தவன் ஓரிடத்தில் திடீரென்று நின்றுவிட்டான். அவன் கண்களிலே கப்பியிருந்த பீதி பலமடங்கு அதிகரித்துவிட்டது. "ஐயோ!" என்று வாய்விட்டு அலற நினைத்தான். ஆனால், அப்படிக் கதறவில்லை. அவன் பயந்துவிட்டானா? அப்படியானால் எதைக் கண்டு?...

அவனது இமைகொட்டாத கொட்டை விழிகள் எதிரே இருந்த அடர்ந்த தாழம் புதர் ஒன்றில் குத்திட்டு நின்றன. அந்தப் புதருக்குப் பக்கத்திலேயிருந்த பாறை ஒன்றுக்கு மத்தியிலே...

திடீரென்று தன் விழிகள் இரண்டையும் மூடிக்கொண்டான். அதை—அந்த இடத்தைப் பார்க்கப் பயந்தான். ஆனால், அந்த 'ஏதோ' ஒன்று அவனது மனத் திரையில் தோன்றித் தோன்றி அவனைச் சித்திரவதைதான் செய்துகொண்டிருக்க வேண்டும்! ஆமாம்; இப்போது அவனது உடலும் நடுங்க ஆரம்பித்திருந்தது.

'சல சல' வென்ற சப்தம் லேசாக எழும்பியது. காற்று வேகத்தில் சருகுகள் ஆடும்போது எழுந்த ஓசைதான் அது! ஆனால், அவனோ தத்தளித்தான்; 'திறவேன்' என்று மறியல் செய்த கண் இமைகளை லேசாகத் திறந்தான்.

புதருக்கருகிலே 'பளிச் பளிச்' சென்று ஒளி தோன்றியது. இரு மின்மினிப் பூச்சிகள் இயற்கை தமக்களித்திருந்த தனிச் சிறப்பைக் காட்டிக்கொண்டிருந்தனவா?

அதோ, அவனது நடுங்கும் உதடுகள் அசைகின்றனவே! "புலி!...புலி!!...புலி!!!..."— அவன் குரல் அவன் காதுகளுக்காவது விழுந்திருக்குமா என்பது சந்தேகமே! குரலுக்கு எங்கிருந்து வலுவு கிடைக்கும், நடுக்காட்டிலே தனியாகப் புலியொன்றைச் சந்தித்துவிட்ட நேரத்தில்! உடலோ ஓராண்டு நோயிலே சிக்கிச் செத்துப் பிழைத்தவன் நிலையிலே வெலவெலத்துவிட்டதே!

அவன் முகத்தில் முத்து முத்தாக வியர்வை அரும்பிவிட்டது! அவன் தொண்டை வரண்டது! நாக்குழறியது! ஏதோ தானே பேச ஆரம்பித்தான். ஆனால், பித்தனைப்போல் புலம்பினான் மனதிற்குள்ளேயே!

"இன்னும் கொஞ்ச தூரம் தானே இருக்கிறது! ஓடிப்போய் 'மெயின் ரோட்'டில் ஏறிவிட்டால்.. ஓடு! ஓடு!...ஓடிவிடு!..."—மனம் விரட்டியது!

ஓடுவதா? முடியுமா அது? ஐயோ, கால்களை ஏதோ ஒரு வலுவான சக்தி கட்டிப்போட்டுவிட்டதைப்போல் இருக்கிறதே! நகரவே மறுக்கிறதே! என்ன செய்வது?...

"என்ன திருவிழா வேண்டிக்கிடக்குது இப்போ! தனியாப் போகலாமா. பக்கத்து ஊருக்கு வழியிலே காடாச்சே! சீ... சும்மாக்கிட கழுதை!..."

அப்போதே தடுத்தாள் அம்மா! கேட்டிருக்கக் கூடாதா? தாய்-பெற்று வளர்த்தவள் தீயதா நினைப்பாள்? பைத்தியக்காரன், அதை அப்போது எண்ணிப் பார்க்காமல் போய்விட்டான்! திருட்டுத்தனமாக வந்துவிட்டான் திருவிழா பார்க்க!

இருட்டியபிறகுதான் வந்தது வீட்டு நினைவு! வேகமாகப் புறப்பட்டான்.

குறும்புத்தனம் மிக்க அரும்பு வயதாயிற்றே! குறுக்கு வழியாகப் போனால் என்ன? கப்பிப் பாதையைச் சுற்றிப் போவதைவிட பாதி தூரம் தானே குறுக்கே போனால்...! இந்த யோசனை உதித்ததும்தான் குறுக்கே—காட்டுவழியே புறப்பட்டான். ஆனால், ஐயகோ! வழியிலே 'வருக, வருக!' எனக் காத்திருக்கும் வெம்புலி என்று அவன் கண்டான்? ஐயோ, அதோ— மஞ்சள் தோளிலே கரும் புள்ளிகள் கொண்ட கொடும் புலி அவனை வெறிக்கப் பார்த்துக்கொண்டிருக்கிறதே!

'விழுந்தடித்து ஓடிவிட்டால் என்ன?' — அவன் மனதிலே மீண்டும் அந்த நப்பாசை! ஓட முயற்சித்தான். ஆனால்... அந்தக் கொடும் புலி அவனை நோக்கிப் பாயத் தயாராகிவிட்டது! அவன் தத்தளித்தான். கால்கள் நடுங்கின; கைககள் உதறின; உடலோ பெரும் புயலில் சிக்கிய மூங்கில் மரம்போல் சாய்ந்தாடியது!

"உஸ்......உஸ்......" என்ற காற்றின் ஓசையினூடே அந்தப் புலியும் உறுமுவதாக அவன் கேட்டான்!

"ஓடேண்டா முட்டாளே! உயிர் என்ன வெல்லமா! ஓடித்தான் பாரேன்!...ஓடினால் தப்பினாய்; இல்லையேல்...? இல்லையேல்...?"

—பொல்லாத மனச்சாட்சி ஓயா சித்திரவதை செய்துவிடுகிறதே! அவன் உடலெங்கும் வியர்வை ஆறாகப் பெருகியது. கண்கள் இருண்டன! மார்பு பட பட வென்று அடித்துக்கொண்டது. அவன் ஓட எண்ணினான்; ஆனால் அதற்குள் அவன் கண்கள் இருண்டன; பஞ்சடைந்தன!

"ஓடு...! ஓடு...!...ம்...ஓடித் தொலையேண்டா...!"

—அவன் ஓடத்தான் விரும்பினான். ஆரம்பித்தான்...

ஆனால், அவன் கண்கள் மங்கிவிட்டன. கால்கள் பின்னிக்கொண்டன. மறுகணம் 'தடால்' என்று கீழே சாய்ந்தான்! "ஐயோ!" என்று அலறினான்.

புலிக்கு உணவாக்கவா அவன் தாய் அவனைப் பெற்றாள்! அவன் நெஞ்சிலே ஒரு எதிர்பாராத குழப்பம்!...அதோ அவன் அன்னை — அருளொழுகும் முகத்தோடு நிற்கிறாள்!

அப்பா — அன்பொழுக அழைக்கிறார்! ஆனால் அவன் நகரவே முடியாது!

காற்று வேகத்தில் 'தடால்' என்று மரம் ஒன்று சாய்ந்தது! "ஐயோ!" என்று அலறினான். அவன் நினைவு தப்பினான்; நிலை பிழந்தான்; தலை சாய்த்தான்! பரிதாபத்திற்குரிய அந்தச் சிறுவன் முடிவுதான் என்ன?

●

முகத்தில் யாரோ நீர் தெளிப்பது உணர்ந்து திடுக்கிட்டு எழுந்தான். நன்றாக பொழுது விடிந்திருந்தது!

முந்தைய இரவு நிகழ்ச்சி... நினைவு வந்ததும் அவன் திடுக்கிட்டு புதர்ப்பக்கம் நோக்

❋ தொடர்ச்சி 10-ம் பக்கம்

பாப்பா தந்த பரிசு!

● லண்டன் மாநகரில்—வின்ஸ்டர் அரண்மனையில் ஒரு மிகப் பெரிய 'கண் காட்சி சாலை' இருக்கிறது. அரச குடும்பத்துப் பழம் பெரும் பொருள்கள் எல்லாம் அங்கு காட்சிக்காக இருக்கின்றன. கண்ணையும் கருத்தையும் கவரும் அழகான—அற்புதமான பல பொருள்களுக்கு மத்தியில், ஒரு வேடிக்கையான பொருளும் இருக்கிறது. மிகச் சாதாரண நோட்டுப் புத்தகம் ஒன்று—அதிலே கோணிக் குறுகித் தோன்றும் எழுத்துக்கள்! வியப்பாக இருக்கிறதல்லவா? அதைவிட வியப்பானது, அதனுள் பொதித்து கிடக்கும் நிகழ்ச்சி!

● அன்று...இறந்துபோய் விட்டரே ஆறும் ஜார்ஜ் மன்னர், அவருக்கு மகுடம் சூட்டும் விழா! அரச குடும்பத்து முக்கிய விழாவாயிற்றே. மன்னருக்கு ஏராளமான பரிசுகள்— உயர்வான பொருள்கள் குவிந்தன.

அப்போது......மன்னரின் பன்னிரெண்டு வயது மகளும் பரிசு ஒன்றினை எடுத்துக் கொண்டு வந்தாள். மன்னர் மட்டுமல்ல: கூடியிருந்தவர் அனைவரும் ஆச்சரியப்பட்டனர் அந்தப் பொருளைப் பார்த்து. அதுவேறு ஒன்றும் விலையுயர்ந்த பொருள் அல்ல. சிவப்பு நாடாவால் கட்டப்பட்ட ஒரு நோட்டுப் புத்தகம்! அதனுள் 'மகுட'த்தைப்பற்றி ஒரு சிறிய கட்டுரை எழுதப் பட்டிருந்தது. அதை எழுதியதும் அந்தச் சிறுமி தான்! மன்னர் தன் அன்பு மகளின் திறமையைக் கண்டு மகிழ்ந்தார்.

● மகுடத்தைப் பற்றி கட்டுரை எழுதிய அந்தச் சிறுமியே ஒரு நாள் 'மகுட'த்தைச் சுமக்கப் போகிறாள் என்பது யாருக்குத் தெரியும்? இன்று கண் காட்சி சாலையில் இருக்கும் அந்தக் கட்டுரைப் புத்தகத்தைப் பரிசளித்தவர் யார் என்று புரிகிறதா. இங்கிலாந்தின் இன்றைய ராணியார் இரண்டாவது எலிசபெத் அவர்கள்தான்!

கடைசிப் பக்கம்

எழுத்தாணி

வி. கே. நரசிம்மன் ; சென்னை-13

(?) லால்பகதூர் சாஸ்திரி பார்ப்பனரா ?

இல்லை ; அவர் ஒரு வடநாட்டுப் பார்ப்பனரல்லாதார் !

எஸ். நாகலிங்கம் ; விருதுநகர்.

(?) பிரகாசா சென்னையில் ஒரு அம்மையாரை மணம் புரிந்து கொள்ளப் போவதாகவும் ; விரைவில் அந்த மணம் நடைபெறும் என்றும் 'பிளிட்ஸ்' பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாகி யிருந்ததே : அது உண்மையா?

ஆமாம் ; நானும் படித்தேன். ஆனால் மறு இதழிலேயே அந்தச் செய்தி தவறு—என்றும் அந்தப் பத்திரிகை வெளியிட்டிருந்ததை நீர் படிக்கவில்லையா?

சுந்தரபாண்டியன் ; புரசை.

(?) லால்பகதூர் சாஸ்திரி ஏன் விலகினார்?

தேர்தல் வருகிறதல்லவா? அதனால்தான் மக்களால் விலக்கப்படுவதற்கு முன்பு தானாகவே விலகிக்கொண்டிருக்கிறார்?

அனந்தராமன் ; திருவல்லிக்கேணி.

(?) பருத்திக் கொட்டையைச் சாப்பிடச் சொன்ன முன்ஷி கடைசிவரைப் பதவியிலிருந்த போது சாஸ்திரியார் விலகியதற்கு மட்டும் என்ன அர்த்தம்?

சென்ற தேர்தலில் மொழி வழி மாநிலப் பிரிவினை இல்லை; குஜாராத்தியர், மராட்டியர் போராட்டங்கள் கிடையாது; தேவிகுளம் பீர்மேடு பிரச்சினை எழவில்லை. அதனால்தான் அப்போது முன்ஷி விலகவில்லை. இப்போது வரப்போகும் தேர்தலில் எதிர்ப்பு அதிகமாக இருக்கிறதே; அதனால்தான் சாஸ்திரியார் விலகுகிறார்!

வி. என். பாண்டியன்;
அவிசாவேள்ள.

(?) நேரு ஏன் இப்போது அமெரிக்கா செல்கிறார்?

தேர்தல் வருகிறது நண்பரே; தேர்தல் வருகிறது!

'மணிமுடிவேந்தன்'; காரைக்குடி.

(?) ஒருவர் ஒரு மாநிலத்தின் கவர்னராவதற்கு என்னென்ன தகுதிகள் இருக்கவேண்டும்?

(1) கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்துப்போடத் தெரியவேண்டும்! (2) ஆண்டொன்றுக்கு பத்து லட்சம் வரை எண்ணிப் பார்க்கத் தெரிந்திருக்க வேண்டும் !

வி. செங்கையா; பொள்ளாச்சி

(?) பண்டிதர் அரசாங்கப் பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் எந்த வகையில் தன் கொள்கையைவகுத்துக்கொண்டிருக்கிறது?

ஒன்று; தடைபல போட்டுப் பறிமுதல் செய்வதின் மூலம் எதிர்க்கட்சிப் பத்திரிகைகளை அழிப்பது. உதாரணம்: அகாலிதளத்து ஏடுகள்!

அடுத்தது; எதிர்த்தாலும் அழிக்க முடியாத பத்திரிக்கைகளுக்கு அரசாங்க விளம்பரம் கொடுத்து அவைகளை விலைக்கு வாங்குவது. அல்லது; தன்னோடு இலவசமாக ரஷ்யாவுக்கு அழைத்துச் சென்று அவர்கள் 'காலைப் பிடிப்பது'. இதற்கு உதாரணம்: ப்ளிட்ஸ், சங்கர்ஸ்வீக்லி.

இந்த இரு பத்திரிகைகளின் ஆசிரியர்களையும் பண்டிதர் தன்னோடு ரஷ்யாவுக்கு அழைத்துச் சென்று அவர்கள் உள்ளத்தைக் குளிரச் செய்துவிட்டார். அதனால் அவை பண்டிதருக்கு எதிராக அதிகம் எழுதுவது கிடையாது.

கோ. அழகிரிசாமி; உறையூர்.

(?) வீரன் என்பது யார் ?

இப்போதைக்கு தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் ரயிலில் இஞ்சினுக்கு அடுத்த பெட்டியில் துணிந்து பிரயாணம் செய்கிறவன்தான் !

ஜெகன்னாதன்; குடந்தை.

(?) மக்கள் தொகை பெருகிக்கொண்டே போகிறதாமே; அதற்கு இந்த அரசாங்கம் என்ன செய்யப்போகிறது?

இதற்கு இருவழிகளைக் கையாண்டு வருகிறது. (1) கர்ப்பத்தடையை வற்புறுத்துவது (2) அடுத்தது அரியலூர் போன்ற ரயில் விபத்துக்களை அதிகமாக்கிக் கோண்டே போவது.

இம்மாதம், 4—11—56 முதல் 20—11—56 வரை இலங்கையில் நடைபெற்ற திருக்குறள் மாநாடு, கட்சிக் கூட்டங்கள், பொது நிகழ்ச்சிகள், கல்லூரி வைபவங்கள் முதலியவைகளில் கலந்துகொண்டு 21—11—56 அன்று தாயகம் வந்து சேர்ந்தேன்.

கி. மனோகரன் பி. ஏ. (ஹானர்ஸ்,)
நாகர்கோயில்.

சிங்கப்பூரில் தமிழர் விழா

சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், செரம்பான், ஈப்போ, பினாங்கு முதலிய நகரங்களில் இந்த ஆண்டு தை முதல் நாள் தொடங்கி நடைபெற விருக்கும் தமிழர் திருநாட்களில் கலந்துகொள்வதற்காக வந்த அழைப்பை திருச்சி, திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் ஏற்றுக்கொண்டு டிசம்பர் மாத இறுதியில் சென்னையிலிருந்து விமான மூலம் சிங்கப்பூருக்குச் செல்ல இருக்கிறார்.



ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே--மண்ணடி--சென்னை-1.

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில் இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

சென்ற வருட நவம்பர் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட நவம்பரில் முடிவடைந்தன.
புதிய வகுப்புகள்
டிசம்பர் 10-ந் தேதி ஆரம்பமாகின்றன.
வகுப்பில் சேர விண்ணப்பம் செய்துகொள்ள
கடைசி தேதி: 8-12-1956
முழு விபரங்களை நேரில் வந்து தெரிந்துகொள்க.

இலக்கண ரீதியாக இங்கிலீஷில் பேசவும், சொந்தமாகக் கட்டுரைகள், கதைகள், கடிதங்கள் எழுதவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். காலையிலோ மாலையிலோ வசதியான நேரத்தில் வகுப்பிற்கு வந்து ஒரு மணி நேரம் படித்தால் போதுமானது.

முக்கிய அறிவிப்பு:- 16 வயதிற்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்பில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவரும் இந்த நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்.

ஆசிரியரும் அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட் ரோடு சென்னை-6 தமிழ்நாடு